விலை: 50.00 Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005


இல.144.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆவணி 31 புதன்கிழமை (16.09.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 272

## ஆவரங்காலில் வீடு புகுந்து அதிகாலை வாள்வெட்டு
### இளைஞர் ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)
யாழ்.புத்தூர் ஆவரங்கால் பகுதியில் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் வீடு புகுந்து வாள் வெட்டுக் குழு 23

## வடமராட்சியில் குடும்பஸ்தர் படுகொலை



*(கரணவாய்)*
**வடமராட்சிப் பகுதியில் வீதியில் பயணித்த குடும்பஸ்தர் ஒருவர் கத்தியால் கழுத்தில் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.**

பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வியாபாரி மூலைப் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை நான்கு மணியளவில் இடம்பெற்ற 23

## கஞ்சா, மஞ்சள் கடத்திய
### இரு பெண்கள் உட்பட ஐவர் கைது

(மன்னார்)
மன்னார், உயிலங்குளம், புதுக்குடியிருப்பு பகுதியில் 23

## கொக்குவிலில் இளைஞன் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)
கொக்குவிலில் இளைஞர் ஒருவர் நேற்று சடலமாக மீட் 23

## திலீபனை நினைவுகூர்ந்தால்
# பயங்கரவாத சட்டத்தில் கைது செய்யப்படலாம்
### நினைவுகூரலுக்கு தடை விதித்து யாழ்.நீதிமன்ற நீதவான் தீர்ப்பு

*(கொழும்பு)*
*விடுதலைப் புலிகள் அமைப்பு தடை செய்யப்பட்ட பயங்கரவாத இயக்கம். எனவே திலீபனை நினைவுகூர்வது அந்த அமைப்பொன்றின் உறுப்பினரை நினைவுகூர்வதாக அமையும் என யாழ். நீதிமன்ற நீதவான் தெரிவித்துள்ளார்.*

*அவ்வாறு நினைவுகூர்ந்தால், அது பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படக்கூடிய குற்றம் என்றும் யாழ்.நீதவான் ஏ.எஸ்.பீற்றர்போல் தீர்ப்பளித்துள்ளார்.* *(04ஆம் பக்கம் பார்க்க)*

## தியாகி திலீபனின் தூபிக்கு அருகில்
### துப்புரவுக்குத் தடை

(யாழ்ப்பாணம்)
நல்லூரிலுள்ள தியாக தீபம் திலீபனின் தூபியை யாரும் நெருங்க விடாமல் பெரும் எண்ணிக்கையில் பொலிஸ் அணி குவிக்கப்பட்டுள்ள 04

## திலீபனின் நினைவேந்தலுக்கு மன்னாரிலும் தடை விதிப்பு

(மன்னார்)
இலங்கையில் தடை செய்யப்பட்ட அமைப்பான தமிழீழ விடுதலை புலிகள் அமைப்பின் அரசி 04

## தியாகி திலீபனுக்கு அஞ்சலி செலுத்திய சிவாஜிலிங்கம் கைது




(யாழ்ப்பாணம்)
தியாகி திலீபனின் நினைவேந்தலை தடுக்க யாழில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில், திலீபனின் நினைவேந்தல் தொடக்க நாளான 23

## நீதியரசருக்கு எதிரான வழக்கை வாபஸ் பெற நிபந்தனை விதித்த டெனிஸ்வரன்
### இறுதி நேரத்தில் குத்துக்கரணம்
### நிபந்தனைக்கு அடிபணியாத விக்னேஸ்வரன்

(யாழ்ப்பாணம்)
பாராளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரனிற்கு எதிரான நீதிமன்ற வழக்கு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

நேற்று வழக்கு விசாரணைக்கு எடுக்கப் 23

## நல்லூரிலுள்ள திலீபன் நினைவிடத்திலிருந்த
## உருவப்படங்கள், அலங்காரங்கள்
### இரவோடு இரவாக பொலிஸாரால் அகற்றம்



(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் நல்லூரில் தியாகி திலீபனின் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவதற்கு யாழ். நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை முழுமையான தடை உத்தரவு பிறப்பித்திருந்தது.


இந்நிலையில் நல்லூர் கந்தசுவாமி 23

## விவசாயிகளிடம் அறவிடப்படும் 10 வீத கழிவை நிறுத்துங்கள்!
### விவசாய அமைச்சர் உத்தரவு

(யாழ்ப்பாணம்)
யாழ்.மாவட்ட சந்தைகளில் விவசாயிகளிடம் அறவிடப்படும் 10 வீத கழிவினை உடனடியாக நிறுத்துமாறு விவசாய அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே, வடக்கு மாகாண அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

யாழ் மாவட்ட விவசாயிகள் முகங்கொடுக் 04

# மரண அறிவித்தல்



## மாரிமுத்து சிவகுமார்

மாவை - கலட்டி, தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் தவசிகுளம், கொடிகாமத்தை வதிவிடமாகவும் கொண்ட மாரிமுத்து சிவகுமார் நேற்று (15.09.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் மாரிமுத்து - பத்மினி தம்பதியரின் மகனும் சத்தியநாயகியின் கணவரும் புனிதறாணியின் சகோதரியும் இளங்குமரன், சுருதி, திவ்வியன், சிவதனுசன் ஆகியோரின் தந்தையும் யோகராசா, வரதராசா, சௌந்தரராசா, விஜயராசா, ரகுராசன், துசியந்தராஜன், பவளராணி, சிதம்பரநாயகி ஆகியோரின் மைத்துனரும் சிறிரஞ்சன், காந்தன், தரன், நந்தினி ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.09.2020) வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காலை 10.00 மணியளவில் ஈச்சங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-331)

தவசிகுளம்,
கொடிகாமம்.

தகவல்:-
குடும்பத்தினர்

# சுகாதாரத் தொழிலாளர்களை தாக்கியவர் பொலிஸாரால் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் சுகாதாரத் தொழிலாளர்களை தாக்கிய வர்த்தக நிலையப் பணியாளர் சாவ கச்சேரி பொலிஸாரால்நேற்றுமுன்தினம்இரவுகைது செய்யப்பட்டுள்ளார். (ம-03.30)

# மரண அறிவித்தல்

பிறப்பு
19 – 10 – 1945



இறப்பு
13 – 09 – 2020

## திரு. ஜெயரட்ணம் இராசேந்திரன்

Retired AGM of bank of Ceylon Head Office, Previously - Regional Manager Bank of Ceylon Jaffna, Manager Bank of Ceylon UK, Country Manager Bank of Ceylon Chennai
அச்சுவேலி (பிறந்த இடம்) நல்லூர் Anna Nagar - India

யாழ். அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலி, நல்லூர் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும், இந்தியா சென்னை அண்ணாநகரை வதிவிடமாகவும் கொண்ட ஜெயரட்ணம் இராசேந்திரன் 13.09.2020 ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் ஜெயரட்ணம் - சிவம் ( அச்சுவேலி) தம்பதிகளின் அன்பு மகனும் சாந்தினி அவர்களின் அன்புக் கணவரும் அக்ஷயன் அவர்களின் பாசமிகு தந்தையும் மகேந்திரன், யோகேந்திரன், சுதேந்திரன், அபிராமி ஆகியோரின் அன்புச் சகோதனும் ரோகிணி மகேந்திரன், சந்திரிக்கா சுதேந்திரன், குமரேசன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் கஜகரன் (அவுஸ்திரேலியா), சிவகரன் (சென்னை), சிவம் (கனடா) ஆகியோரின் அன்பு மாமாவும் மாதங்கி (கனடா), சாம்பவி (கனடா) ஆகியோரின் அன்புத் தாய்மாமனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 14.09.2020 திங்கட்கிழமையன்று இந்தியா, சென்னை அண்ணாநகரில் தகனம் செய்யப்பட்டது.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-1034)

மகேந்திரன் - சகோதரர் : +94767233345
அபிராமி - சகோதரி : +4163350198
ராதா - மைத்துனர் : + 94777411146
சாந்தினி - மனைவி : +0091984192441

தகவல்:-
குடும்பத்தினர்

# கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கைதடி நாவற்குழி விவசாய சம்மேளனப் பிரிவுக் குட்பட்ட 2020/12ஆம் ஆண்டுக்கான கால போக வேளாண்மைக் கூட்டம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு கைதடி நாவற்குழியிலுள்ள ஸ்ரீ முருகன் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

# மரண அறிவித்தல்

## திருமதி கோபாலபிள்ளை மகாலட்சுமி (சின்னமணி)



வேலணை கிழக்கு, 3ம் வட்டாரத்தைப் பிறப்பிட மாகவும் உடையார் ஒழுங்கை, பொற்பதி வீதி, கொக்குவில்லை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கோபால பிள்ளை மகாலட்சுமி (சின்ன மணி) நேற்று முன்தினம் (14.09.2020) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான காங்கேசு - சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ் சென்றவர்களான செல்லையா - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கோபாலபிள்ளையின் அன்பு மனைவியும் ஜெயந்தி (ஆசிரியை, யாழ். இந்து மகளிர் கல்லூரி), ஜெயக்குமார் (ஜேர்மனி), ஜெயசுதா (கனடா), ஜெயசங்கர் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் கமலேஸ்வரன் (ஆசிரிய ஆலோசகர், தென்மராட்சி வலயம்), சுபாஜினி (ஜேர்மனி), விந்தன் (கனடா), வித்தியா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் சங்கவி, சாம்பவி, ஆகாஷ், அபினாஷ், வைஸ்ணவி, விரிஷாந், வினித், இனியவள், ஈழவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் இராஜேஸ்வரி (சுவிஸ்), இராசலட்சுமி (பிரான்ஸ்), காலஞ்சென்ற சிவராசா, தங்கலெட்சுமி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான சிங்கராஜா, திருநாவுக்கரசு, மங்கயற்கரசி மற்றும் பரமேஸ்வரி (கனடா) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.09.2020) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேலணை சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(3889)

" தாயகம் " உடையார் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.

077 662 9992
077 841 7579

தகவல்:-
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

பிறப்பு
22 – 03 – 1949



இறப்பு
15 – 09 – 2020

## திருமதி பாலேந்திரன் நவமணிதேவி

திக்கத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலேந்திரன் நவமணிதேவி நேற்று (15.09.2020) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் மூத்தமகளும் காலஞ்சென்ற சட்டத்தரணி சிவசங்கரன் பார்வதவர்த்தினி (முன்னாள் அதிபர், யா/சாவகச்சேரி இந்து மகளிர் கல்லூரி) தம்பதியினரின் மருமகளும் காலஞ்சென்ற சிரேஸ்ட சட்டத்தரணி சிவசங்கரன் பாலேந்திரனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கமலாதேவி, தெய்வேந்திரன் (திக்கம் சேர்) மற்றும் விமலாதேவி ஆகியோரின் மூத்த சகோதரியும் சிவராஜா (கொழும்பு), காலஞ்சென்ற யோகமலர் மற்றும் ஞானச்சந்திரன் (யா/ஏழாலை மகா வித்தியாலய ஓய்வுநிலை அதிபர் ), பத்மினிதேவி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.09.2020) புதன்கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திக்கம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-329)

திக்கம்,
076 670 4956


தகவல்:-
ஞா. விமலாதேவி (சகோதரி)

# நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வடக்கு மக்களின் உதவி அவசியமாகும்

## யாழில் விவசாய அமைச்சர் சுட்டிக்காட்டு







(யாழ்ப்பாணம்)

**நான் விவசாய அமைச்சராக பதவியேற்றதும் முதலில் யாழ்ப்பாணத்திற்கு வந்ததன் நோக்கம் நாட்டின் பொருளாதாரத்தை வடக்கு மக்களின் உதவியுடன் மீண்டும் கட்டியெழுப்புவதற்கே என விவசாய அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.**

யாழிற்கு நேற்று விஜயம் மேற்கொண்ட அவர் யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் விவசாயிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு மக்களை சந்திப்பதற்காக விவசாய அமைச்சர் நீண்டகாலத்திற்குப் பின்பே யாழ்ப்பாணத்திற்கு வந்திருப்பதாக நினைக்கிறேன்.

நான் விவசாய அமைச்சராக பதவியேற்றதும் யாழ்ப்பாணத்திலுள்ள விவசாயிகளைப் பார்ப்பதற்காகவே முதலில் வந்துள்ளேன். நாட்டின் பொருளாதாரத்தை வடக்கு மக்களின் உதவியுடன் மீண்டும் கட்டியெழுப்பும் நோக்குடனே இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளேன்.


ஆரம்ப காலங்களில் தென் பகுதிக்கு கிழங்கு, மிளகாய், வெங்காயம் என்பன வடக்கிலிருந்தே வந்தன.

அதனால் அப்போது வடக்கு விவசாயிகளின் பொருளாதாரம் வலிமையாக காணப்பட்டதுடன் பணமும் அதிகமாக பெறக்கூடியதாக இருந்தது. ஆனால் இப்போது அவ்வாறு இல்லை.

வடக்கு பகுதியின் விவசாயத்தைப் பலப்படுத்தி, வடக்கு மக்களின் பொருளாதாரத்தையும் பலப்படுத்துவதே எமது நோக்கமாகும்.

எம்மிடம் போதுமானளவு பணம், தொழில்நுட்பம் எல்லாம் உள்ளது. உங்கள் தேவைகளை எமக்குத் தெரியப்படுத்துங்கள். உங்களது உற்பத்திகளை வெளிநாடுகளில் நல்ல கேள்விக்கு விற்றுத்தர முடியும் என மேலும் தெரிவித்தார். (ஜ-5-8)

# கடத்தல்காரர்களின் சொத்துக்கள் விவகாரம் பிரதமர் சட்டமா அதிபருக்கு ஆலோசனை



(கொழும்பு)

போதைப்பொருள் கடத்தல்காரர்களின் சொத்துக்களை அரசுடைமையாக்குவது தொடர்பாக ஆராயுமாறு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ சட்டமா அதிபருக்கு ஆலோசனை வழங்கினார்.

நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போது பிரதமர் இந்த ஆலோனையை வழங்கினார்.

போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்குச் சொந்தமான சொத்துக்களை ஏனையவர்களுக்கு கைமாற்றுவதற்கும் விற்பனை செய்யவும் தடைவிதிக்க தேவையான உரிய வேலைத்திட்டங்களை தயாரிக்குமாறும் பிரதமர் ஆலோசனை வழங்கினார்.

இதற்கு தேவையான நீதிமன்ற கட்டளையை விரைவில் பெற்று இந்த செயற்பாடுகளை வினைத்திறனுடன் மேற்கொள்ள வேண்டும் எனவும் சொத்துக்களை அரசுடைமையாக்குவதற்கு தேவையான சட்டங்களில் திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டும் எனின் அதற்கு தேவையான நடவடிக்கைகளையும் முன்னெடுக்குமாறும் பிரதமர் அறிவுறுத்தினார். (ஜ-4)

# ரணில் தனது தேவைக்காகவே 19 ஐ உருவாக்கினார்

## நிமல் லன்சா குற்றச்சாட்டு



(கொழும்பு)

19 ஆவது அரசியலமைப்பு திருத்தம் நாட்டுக்கு பயனை பெற்றுக் கொடுப்பதற்காக அன்றி, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அதிகாரங்களைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கத்திலேயே உருவாக்கப்பட்டிருப்பதாக இராஜாங்க அமைச்சர் நிமல் லன்சா குற்றஞ்சாட்டியுள்ளார்.

நீர்கொழும்பு நகர சபையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ள அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தில் நாட்டுக்கு பயன்தரும் எந்தவிடயங்களும் இல்லை. உயிர்த்த ஞாயிறுதின தாக்குதல்களின் பின்னர் பொலிஸ்மா அதிபரை பதவி விலக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. ஜனநாயக நாடொன்றில் தேர்தலை உரிய நேரத்தில் நடத்த வேண்டும் என்ற நிலைமை காணப்பட்டாலும் சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவினால் தேர்தலை உரிய நேரத்தில் நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டிருந்தது.

நல்லாட்சி அரசாங்கத்தில் ஜனாதிபதியும் பிரதமரும் இருபாதையில் பயணித்தனர். அதனால் நாடு பின்னடைவையே சந்தித்திருந்தது. அதனால் தான் மக்கள் எமக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றுக் கொடுத்துள்ளனர். முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் ஜனாதிபதியாக வரமுடியாது என்பதன் காரணமாகவே 19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை கொண்டு வந்து பிரதமருக்கான அதிகாரங்களை அதிகரித்துள்ளனர்.

இதவேளை ராஜபக்ஷர்களை அரசியல் செயற்பாடுகளிலிருந்து விலக்கும் எண்ணமும் இந்த திருத்தத்தில் மேலோங்கி காணப்படுகின்றது.

இந்நிலையில் அரசாங்கத்தினால் கொண்டுவரப்படவுள்ள 20 ஆவது அரசியலமைப்பு திருத்த வரைபானது நாட்டுக்கு நன்மை பயக்கும் திருத்தமொன்றாகவே உருவாக்கப்படவுள்ளது. அதற்கமைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ திருத்தத்தை மீளாய்வு செய்வதற்கு தகுதியான நபர்களையே நியமித்துள்ளார் என தெரிவித்தார். (ஜ-4)

## தியாகி திலீபனின்...

நிலையில், இளைஞர் அணியொன்று திடீரென நேற்று அங்கு களமிறங்கி தூபிக்கு அருகில் துப்புரவு செய்ய முயற்சி செய்தது.

இதனால் பரபரப்படைந்த பொலிஸார், அந்த இளைஞர்களுடன் பேசி, தூபியை நெருங்க வேண்டாம், அந்த பகுதியில் பிறிதொரு தினத்தில் துப்புரவு செய்யுமாறு கூறி துப்புரவுக்கு தடை விதித்தனர். (ம-3)

## பயங்கரவாத...

திலீபனின் நினைவேந்தலிற்கு தடை கோரி யாழ்.பொலிஸ் நிலைய பொலிஸார் தாக்கல் செய்த மனுவை ஏற்று, நினைவேந்தலிற்கு யாழ்.நீதிமன்றம் தடை விதித்திருந்த நிலையில் நேற்று திருத்த மனு சமர்ப்பிக்கப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செ.கஜேந் திரன், வ.பார்த்தீபன் உள்ளிட்டவர்கள் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு சார்பில் சட்டத்தரணிகள் வி.திருக்குமரன், கு.குருபரன் ஆகியோர் முன்னிலையாகினர்.

இந்நிலையில் தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பின் உறுப்பினரை நினைவு கூர்வதை நீதிமன்று தடை செய்கிறது என நீதவான் தீர்ப்பளித்துள்ளார். (ம-3)

## விவசாயிகளிடம்...

கும் பிரச்சினைகள் குறித்து ஆராய் வதற்கான கூட்டம் ஒன்று நேற்றைய தினம் யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில், விவசாயத்துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே தலைமையில் இடம்பெற்றிருந்தது.

குறித்த கூட்டத்தில் கலந்துகொண்ட விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகளால் அமைச்சரின் கவனத்திற்கு பல்வேறு பிரச்சினைகள் கொண்டு வரப்பட்டது.

அதற்கமைய வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சந்தைகளில் விவசாயிகளால் உற்பத்தி செய்யப்பட்டு சந்தையில் விற்பனைக்கு கொண்டு சென்று விவசாய பொருட்களை விற்பனை செய்யும் போது, சந்தைகளில் 10 வீத கழிவு அறவிடும் நடைமுறையை நிறுத்துமாறு அமைச்சரிடம் கோரிக்கை விடுக் கப்பட்டது.

உடனடியாக அந்த கழிவு பணம் பெறும் நடவடிக்கையினை இடை நிறுத்து மாறு வடக்கு ஆளுநர் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளரை அமைச்சர் பணித்ததோடு அவ்வாறு நிறுத்த தவறினால் பொலிஸார் மூலம் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்துமாறு கோரிக்கை விடுத்தார். (ம-3)

## மன்னாரிலும்...

யல் அமைப்பு தலைவராக செயல் பட்டு மரணித்த இராசையா பார்த்தீபன் அல்லது திலீபனின் நினைவு நாளை நினைவு கூருவதற்கு மன்னார் நீதவான் நீதிமன்றம் நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை தடை விதித்துள்ளது.

நினைவஞ்சலி நிகழ்வு நடத்துவதால் குறித்த வீதியில் வாகன நெரிசல் ஏற்படும் என்பதுடன் இவ் நிகழ்வில் கலந்து கொள்ளும் மக்களுக்கு கிளர்ச்சி பற்றிய எண்ணங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுவதாகவும், நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சமாதான சூழலுக்கும் இவை பங்கம் ஏற்படுத்தும் என்பதாலும் நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை தொடக்கம் எதிர்வரும் 28 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் மன்னார் நீதவான் நீதிமன்ற அதிகார எல்லைக்குள் நினைவேந்தல் நிகழ்வு நடத்துவதற்கு உடனடி தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ம-3,285)

## விவசாயிகளுடனான கலந்துரையாடலில் தமிழில் பேசிய மகிந்தானந்த அளுத்கமகே

(யாழ்ப்பாணம்)

விவசாய அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே யாழில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலொன்றின்போது தமிழ் மொழியில் பேசி கலந்துரையாடியிருந்தார்.

யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் விவசாயிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் தமிழில் கலந்துரையாடியிருந்தார்.

நான்யாழ்ப்பாணத்திற்கு வந்து சிங்களத்தில் பேசுவேன் என நினைத்தீர்களா? இப்போது எப்படி தமிழால் பேசுகிறேன் என ஆச்சரியப்படுகிறீர்கள்? என வேடிக்கையாக தெரிவித்திருந்தார். (ஜ-4.8)




# சிங்கார வேலவன் சிவகாயத்திரி அம்பாள் சுந்தர சுவர்க்கவாயில் சந்நிதானம்

**ஏகாதச ருத்ர ஹோம வழிபாட்டின் பதின் ஐந்தாம் நாள் கிரியா பூர்வமான சமர்ப்பணம்**

**சுனாமியால் காவு கொள்ளப்பட்டு மரணமடைந்த ஜீவாத்மாக்களின் ஆத்மசாந்திப் பூசை (16.09.2020)**

யாழ்ப்பாணம் - வண்ணார்பண்ணை அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்பாள் ஆலய ஈசான பாகத்தில் வீரமாகாளி தாயாரின் திருவருள் குறிப்பால் உணர்த்தப்பட்டு புதிதாக அமையப் பெற்ற சிங்கார வேலவன் சிவகாயத்திரி அம்பாள் சுந்தர சுவர்க்கவாயில் சந்நிதானத்தில் உலக நன்மை வேண்டி நடைபெற்றுக் கொண்டிருக்கும் மஹாளயபட்ஷ மண்டலாபிஷேகத்தில் இன்றைய தினம் சுனாமியால் காவுகொள்ளப்பட்ட ஆத்மாக்களின் ஆத்மசாந்திப் பூசையில் இயன்றவர்கள் ஆலயத்துக்கு வருகை தந்து நமசிவாய உச்சாடனம் செய்து அவர்களின் ஆத்மசாந்திக்காக பிரார்த்திப்போமாக.

17.09.2020 அன்று நடைபெறுகின்ற ஏகாதசி ருத்ர ஹோமத்தில் அடியார்கள் கலந்து கொண்டு ஓமத் திரவியம் வழங்கி சிறப்புப் பூசையில் பங்குபற்றி அனர்த்தம் காரணமாக இறந்த அனைத்து ஆத்மாக்களின் ஆத்மசாந்திப் பூசை வழிபாட்டில் ஈடுபட்டு தங்கள் மூதாதையரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து எம்மைப் பீடித்துள்ள பிதிர்த் தோசம் நீங்கப் பெற வழிசமைப்போமாக.

குறிப்பு :- இறந்த ஆத்மாக்களின் பிதிர்க்கடன் பூசை இன்றும் நாளையும் சிறப்பாக நடைபெறவுள்ளது. இவ்வழிபாட்டில் தங்கள் மூதாதையருக்கு பிண்டமிட்டு எள்ளும் நீரும் இறைத்து வழிபாடாற்றிக் கொள்ள முடியும்.

விரும்புகின்ற அடியவர்கள் ஆலய காரியாலயத்தில் பதிவு செய்து அல்லது குறித்த திகதிகளில் ஆலயத்துக்கு வருகைதந்து பிதிர்த்தோச நிவர்த்தி பூசையில் பங்கெடுக்க முடியும்.

- தெளிவே எம் சிந்தனை -

ஆலய தர்ம பரிபாலன சபையினர்

(C-331)



# பெறுகை அறிவித்தல்

## பருத்தித்துறை நகர சபை, பருத்தித்துறை

1. தலைவர், உள்ளூராட்சி மன்றப் பெறுகைக்குழு, பருத்தித்துறை நகர சபையினால் கீழ் காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட இணைப்புக்கள், உபகரணங்கள் வழங்குவதற்கு தகுதிவாய்ந்த விநியோகஸ்தர்களிடமிருந்து அரக்கு முத்திரை இடப்பட்ட விலைக் கேள்விகள் கோரப்படுகின்றன.
2. பொருத்தமான மற்றும் ஆர்வமுள்ள வழங்குநர்கள் இதற்கான ஆங்கில மொழியிலான பூரணமான கேள்வி ஆவணமொன்றை தலைவர், உள்ளூராட்சி மன்றப் பெறுகைக்குழு, பருத்தித்துறை நகர சபை, பருத்தித்துறை எனும் இடத்தில் 2020.09.16ஆந் திகதியிலிருந்து 2020.09.29ஆந் திகதி வரை காலை 09.00 மணிக்கும் பி.ப 15.00 மணிக்கும் இடையில் பார்வையிடவும், மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 2000.00 இனை செலுத்தி பெற்றுக் கொள்ளவும் முடியும்.
3. கிடைக்கப்பெற்ற விலைக் கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியின் ஒருபகுதியினை மட்டும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது இப் பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.
4. விண்ணப்பங்கள் யாவும் தலைவர், உள்ளூராட்சி மன்றப் பெறுகைக்குழு, பருத்தித்துறை நகர சபை, பருத்தித்துறை எனும் முகவரிக்கு 2020.09.30 ஆந் திகதி பி.ப 15.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் கேள்வி திறக்கப்படும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வி திறத்தலுக்கு கேள்விதாரர் அல்லது அவரது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.
5. தெரிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் பருத்தித்துறை நகர சபை, பருத்தித்துறை எனும் இடத்தில் பொருட்களை விநியோகிக்க வேண்டும்.
6. கேள்வி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையை கேள்விப் பிணையாக வங்கியில் செலுத்த வேண்டும்.

| இல | விபரம் | அண்ணளவான எண்ணிக்கை |
|---|---|---|
| 01. | Street Lamp (Aluminium Monkey cap type shade with Ceramic Screw type (E27) Lamp holder) with LDR (Light Dependent Resister) Switch including fittings | 200 |

**யோ.இருதயராசா**
தலைவர்,
உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு,
பருத்தித்துறை நகர சபை,
பருத்தித்துறை.
2020.09.16.

(C-328)



## யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை (வ-து)

# பதவி வெற்றிடம்

| | |
|---|---|
| பதவி | : கட்டுனர் |
| | சம்பளக் குறியிட்டு இலக்கம் 320/17 |
| சம்பளத் திட்டம் | : 14725 - 115X10 - 130X10 - 17175 |
| | (கூ.வே.ஆணைக்குழுவின் 4/2018 சுற்றறிக்கையின்படி) |

**கல்வித் தகைமைகள்**

அ) 8ம் வகுப்பு சித்தியுடன் அச்சுத்துறையில் 01 வருடத்துக்கு குறையாத அனுபவம்.

**அல்லது**

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தரப்பத்திரம்/க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் கணிதம்/எண்கணிதம்/தமிழ்/சிங்களம் உட்பட ஆறுபாடங்களுடனான சித்தியிருத்தல் வேண்டும்.

- வயதெல்லை:- 18 – 45 வரை
- கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.
- தெரிவு செய்யப்படுபவர்கள் சபையால் விதிக்கப்படும் பிணையினை செலுத்துதல் வேண்டும்.
- விண்ணப்பத்துடன் சகல சான்றிதழ்களின் பிரதிகளும் இணைக்கப்படல் வேண்டும்.
- நிறுவனங்களில் கடமை புரிபவர்கள் நிறுவனத்தின் ஊடாக நிறுவன தலைவரின் சிபார்சுடன் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.
- கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
- விண்ணப்ப முடிவுத் திகதி 30.09.2020.
- விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:- செயலாளர்
  யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை
  கூட்டுறவாளர் வீரசிங்கம் கட்டடத் தொகுதி,
  2ம் மாடி, இல.12, கே.கே.எஸ் வீதி,
  யாழ்ப்பாணம்.

மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்க தகுதியுடையோர் விண்ணப்பப்படிவத்தை சபையின் கடமை நேரத்தில் ரூபா 20.00 செலுத்தி பெற்று விண்ணப்பிக்கவும்.

16.09.2020

செயலாளர்,
யா.மா.கூ.சபை

(C-324)

# இலங்கையை பௌத்த நாடென்று அடையாளப்படுத்த முடியாது

## மங்கள திட்டவட்டம்

(கொழும்பு)

நாட்டில் பெரும்பாலான விடயங்களை சிங்கள பௌத்த என்ற பெயரில் அடையாளப்படுத்திக் கொள்வது தவறான விடயமாகும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, அவரின் குறித்த கருத்துக்கு எதிராக பொலிஸ் தலைமையகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், குறித்த கருத்து தொடர்பில் மாத்தறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் நேற்று வாக்கு மூலம் வழங்கியதன் பின்னர், ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.


இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் பெரும்பாலான விடயங்களை சிங்கள பௌத்த பெயரில் அடையாளப்படுத்துவது முழுமையாக தவறான விடயமாகும்.

இந்தியாவை எடுத்துக் கொண்டால் அங்கு ஹிந்தி மொழியே பெரும்பான்மை மொழியாகும். அதனால் அதை ஹிந்தி நாடு என்று யாரும் கூறுவதில்லை.

இந்தியாவுக்கு இந்தியா என்றே கூறுகின்றார்கள். அந்த யதார்த்தத்தை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஆனால் காவி உடைகளை வியாபாரமாகச் செய்கின்ற தேரர்



களும் பௌத்த மதம் குறித்து தெளிவில்லாத நபர்களுமே இதனை இன்று துரதிர்ஷ்ட வசமாகப் புரிந்து கொள்ளாது இருக்கின்றார்கள்.

சில தேரர்களினாலேயே பௌத்த மதத்தின் தோற்றப்பாடு நாளாந்தம் அழிவடைகின்றது. அந்தத் தேரர்கள்தான் இன்று பாராளுமன்றத்துக்கு செல்ல ஒவ்வொருவரும் அடித்துக் கொண்டு தடுமாறுகின்றார்கள்.

தேரர்கள் தான் நாட்டில் இன, மதங்களுக்கு எதிராக பாகுபாட்டையும் வைராக்கியத்தையும் உண்டுபண்ணுகின்றார்கள் என சுட்டிக்காட்டினார். (ஜ-4)


**விற்பனைக்கு**

**Boc Travels** வவுனியா கிளையில் பாதுகாப்பு பெட்டகம் **(safe Locker)** விற்பனைக்கு உண்டு.

**தொடர்புகளுக்கு:-**
**No 197/198/200, 1ம் மாடி**
**கண்டி வீதி, வவுனியா.**
**0703849335.**

(3886)


# குழுச் சண்டையாக மாறிய குடும்பச் சண்டை

## 4 பேர் 4 மோ.சைக்கிள்களுடன் கைது



(தருமபுரம்)

தருமபுர பொலிஸ் பிரிவுக்குற்பட்ட குமாரசாமிபுரம் பகுதியில் கடந்த திங்கட்கிழமை இரு குடும்பங்களுக்குள் ஏற்பட்ட சண்டை குழுச்சண்டையாக மாறியது.


இரு குழுக்களுக்குமிடையில் ஏற்பட்ட சண்டையில் நான்கு பேர் கிளிநொச்சி வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ள்ளனர்.

இந்நிலையில் நேற்று முன் தினம் மீண்டும் சண்டை ஏற்படுவதை தடுக்கும் நோக்கில் தருமபுரம் பொலிஸார் சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸாரை தடுத்த நிலையில் இராணுவத்தினர் வரவழைக்கப்பட்டனர்.

இதனால் மோதலில் ஈடுபட்டவர்கள் தப்பிச்செல்ல முற்பட்ட வேளை 3 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன் 4 மோட்டார் சைக்கிள்களும் கைப்பற்றப்பட்டன. அத்துடன் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பெண் ஒருவர் 50 போத்தல் கசிப்புடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். கைதான பெண் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டார். மற்றைய சந்தேக நபர்களை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகள் மேற்கொள்வதாக தருமபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கிங்லி கேரத் தெரிவித்தார். (5-4-316)

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு

## அமரர்.கிருஷ்ணபிள்ளை கனகசபாபதி (கனம்)



மலர்வு
03 – 09 – 1953

உதிர்வு
18 – 08 – 2020

கடந்த 18.08.2020 அன்று செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர் அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் நாளை 17.09.2020 வியாழக்கிழமை காலை 6.00 மணியளவில் திருநாவலூர் தெணியம்மன் கோயில் அந்தியேட்டி மடத்திலும் சபிண்டீகரண நிகழ்வு முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

(C-280)

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்**

**கதிரவேற்பிள்ளை வீதி,**
**தம்ப சிட்டி, பருத்தித்துறை.**

**ந.நிரஞ்சன் (மருமகன்)**
**நகர சபை உறுப்பினர் பருத்தித்துறை.**

# அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கோரல்

யாழ்ப்பாணம்


யாழ்ப்பாணம் கல்வி வலயத்திற்குட்பட்ட அச்சுவேலி ஆரம்பப் பாடசாலையில் (வகை III) வெற்றிடமாகவுள்ள அதிபர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான தகைமைகளாவன, இலங்கை அதிபர் சேவை தரம் 3 ஐச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும்.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் விண்ணப்ப முடிவுத் திகதியிலிருந்து ஆகக்குறைந்தது மூன்றாண்டு காலம் சேவையாற்றக்கூடிய வயதெல்லை உடையவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரி தற்போது அதிபராக கடமையாற்றும் பாடசாலையில் 03 வருட சேவையை நிறைவு செய்திருந்தால் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். பொருத்தமான அதிபர் தரத்தினையுடைய பாடசாலையை சேவை நிலையமாகக் கொண்டிராதவர்களும் உதவி, பிரதி அதிபராகக் கடமையாற்றும் அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களும் இந் நிபந்தனைக்கு உட்பட மாட்டார்கள்.

மேற்படி பதவிகளுக்கு யாழ்ப்பாணம் கல்வி வலயத்தைச் சேர்ந்தவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பிக்க விரும்புவோர் மாதிரி விண்ணப்ப படிவத்தை வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் 28 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் "வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், செம்மணி வீதி, நல்லூர்" என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "அதிபர் பதவிக்கான விண்ணப்பம் -2020" எனக் குறிப்பிடுமாறும் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா அறிவித்துள்ளார். (5)



புதிய அரசாங்கத்தின் கிராமத்திற்கு ஓர் வீடு எனும் திட்டத்தின் கீழ் உடுப்பிட்டி தொகுதியில் 5 வீடுகள் அண்மையில் கையளிக்கப்பட்டன. கரவெட்டி மற்றும் பருத்தித்துறை பிரதேச செயலகர் பிரிவுகளுக்கு உட்பட்ட ஜே/350, ஜே/378, ஜே/379, ஜே/380 மற்றும் ஜே/387 ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் இவ் வீட்டுத்திட்டங்கள் கையளிக்கப்பட்டன. இந்நிகழ்வில் வல்வெட்டித்துறை நகர சபையின் சுதந்திரக்கட்சி உறுப்பினர் இனியவன் மற்றும் இளைஞர் அமைப்பினர், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (படம்-சாவகச்சேரி செய்தியாளர்)

# யாழ்ப்பாணம்-காலி பேருந்து சேவை

(யாழ்ப்பாணம்)

பொதுமக்களின் நன்மை கருதி யாழ்ப்பாணத்திலிருந்து காலிவரையான பேருந்து சேவையை காரைநகர் சாலையும், காலி சாலையும் இணைந்து நடத்திவருகின்றன.

அந்த வகையில் செயலாற்றும் பாதையும், நேரமும்,

| | | | |
|---|---|---|---|
| காரைநகர் | -17.30 | காலி | -16.30 |
| காங்கேசன்துறை | -19.10 | மொறட்டுவ | -19.00 |
| யாழ்ப்பாணம் | -20.15 | தெஹிவளை | -19.20 |
| கிளிநொச்சி | -21.45 | மகரகம | -20.00 |
| வவுனியா | -23.00 | (புற்றுநோய் வைத்தியசாலை) | |
| அநுராதபுரம் | -00.30 | பஸ்யால | -21.40 |
| குருநாகல் | -02.10 | குருநாகல் | -23.00 |
| பஸ்யால | -03.20 | அநுராதபுரம் | -00.45 |
| மகரகம | -04.30 | வவுனியா | -02.30 |
| (புற்றுநோய் வைத்தியசாலை) | | கிளிநொச்சி | -03.50 |
| தெஹிவளை | -04.50 | யாழ்ப்பாணம் | -05.15 |
| மொறட்டுவ | -05.15 | காங்கேசன்துறை | -06.00 |
| காலி | -07.00 | காரைநகர் | -07.00 |

இந்நேர அட்டவணைப்படி கடந்த 24 ஆம் திகதி முதல் சேவையில் ஈடுபடுகின்றன என சாலை முகாமையாளர் எம் சிறிமோகன் அறிவித்துள்ளார். (5)

# ஊடகவியலாளருக்கான கருத்தமர்வு

(யாழ்ப்பாணம்)

கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தின் சகவாழ்வு செயற்றிட்டத்தின் கீழ் ஊடகவியலாளருக்கான சமயங்களுக்கிடையிலான மற்றும் சமூகங்களுக்கிடையிலான சமாதான நல்லுறவு வலுவூட்டலில் ஊடகவியலாளரின் பங்கு தொடர்பான கருத்தரங்கு நாளை 17 ஆம் திகதி வியாழக் கிழமை காலை 9.30 மணி முதல் 12.30 மணிவரை யாழ்ப்பாணம் கரித்தாஸ் கியூடெக் மண்டபத்தில் நடைபெறும்.

கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தின் இயக்குநர் அருட்பணி ச.இயூ ஜின் பிராஸ்சிஸ் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் வள வாளராக நிலாந்தன் கலந்து கொள்வார். (5)

# முறைசாராக் கல்வி அலகின் பயிற்சி நெறிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயத்தின் முறைசாராக் கல்வி அலகினால் நடத்தப்படும் பயிற்சி நெறிகளில் கற்பதற்கு ஆர்வமுள்ள பாடசாலையை விட்டு விலகியவர்கள் நிலையம் அமைந்துள்ள பாடசாலை அதிபருடன் தொடர்பு கொண்டு இப் பயிற்சி நெறிகளில் இணைந்து கொள்ள முடியும்.

இப் பயிற்சிகள் தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாசாலை-(ஆடை வடிவமைப்பும் தயாரிப்பும், தையல் பயிற்சி), மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி-(அழகுக் கலை), ஆனைக்கோட்டை றோ.க. த.க.பாடசாலை-(அழகு க்கலை) ஆகியன பயிற்சி நிலையங்களில் இடம்பெறும். பகுதி நேரமாகவும் விடுமுறைத் தினங்களிலும் இடம்பெறும் இப்பயிற்சி நெறிகள் முற்றிலும் இலவசமானது.

வயதுக்கட்டுப்பாடு, கல்வித் தகைமை என்பன கவனிக்கப்பட மாட்டாது எனவும் வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் அறிவித்துள்ளார். (5)

# வைத்தியசாலையின் வளப்பற்றாக்குறை நிவர்த்தி செய்வதாக அமைச்சர் உறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்திய சாலையில் காணப்படும் ஆளணி மற்றும் பௌதிக வள பற்றாக்குறை தொடர்பில் தீர்வுகளைப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் அலுவலகத்திற்கு நேற்று முன்தினம் வருகை தந்த யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி தலைமையிலான பிரதிநிதிகள் அமைச்சரை சந்தித்தனர்.

இதன்போது வைத்தியசாலையின் ஆளணி மற்றும் பௌதிகவள பற்றாக்குறை மற்றும் உட்கட்டமைப்பு தேவைப்பாடுகள் தொடர்பிலும் தெரியப்படுத்தியிருந்தனர்.

குறிப்பாக யாழ்.போதனா வைத்தியசாலை தற்போது பல வைத்திய சேவை பிரிவுகள் விரிவாக்கம் கண்டுவரும் நிலையில் அதற்கான வைத்தியர்கள் மற்றும் தாதியர்கள், ஊழியர்களின் பற்றாக்குறை அதிகமாக உள்ளதை சுட்டிக் காட்டியதுடன் அதற்கான தீர்வு அவசியமானது என்றும் வலியுறுத்தியிருந்தனர்.

வைத்தியர்கள் முன்வைத்த கோரிக்கைகளை கருத்திற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ். போதனா வைத்தியசாலையின் தேவைப்பாடுகளை நிவர்த்தி செய்து கொள்வதற்கான முயற்சிகளை முன்னெடுப்பதற்கு சுகாதார அமைச்சருடன் தாம் சந்திப்பொன்றை மேற்கொள்வதாக தெரிவித்திருந்ததுடன் அதனூடாக வைத்தியசாலையின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்வதாகவும் வைத்திய பிரதிநிதிகளிடம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-8)

# சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



(யாழ்ப்பாணம்)

சித்தன்கேணி சிவன் கோவில் வீதியைச் சேர்ந்த கதிர்காமநாதன் விஜயகாந்தன் அண்மையில் மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் முன்னிலையில் சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் சங்கானை பிரதேச செயலகத்தில் பட்டதாரி பயிலுநராக கடமையாற்றி வருகின்றார். வட்டு இந்துக் கல்லூரியின் முன்னாள் அபிவிருத்திக் குழுச் செயலாளராகவும், அபிவிருத்தி சங்கத்தின் உள்ளகக் கணக்காய்வாளராகவும் மற்றும் பழைய மாணவர்கள் சங்கத்தின் நிர்வாக உறுப்பினராகவும் சேவையாற்றியிருந்தார். இவர் ஒரு சமூக சேவையாளராவார். (5-4)

# பட்டதாரி பயிலுநர்களுக்கு பயிற்சிப் பட்டறை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை அரசினால் தொழில் வாய்ப்பற்ற பட்டதாரி பயிலுநர்களுக்கு அண்மையில் வழங்கப்பட்ட நியமனங்களிற்கேற்ப யாழ்.மாவட்ட செயலகத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ள ஐந்து நாள் பயிற்சிப் பட்டறை ESOFT Metro Campus யாழ்.வளாகத்தில் நேற்று முன்தினம் முதற்கட்டமாக ஆரம்பிக்கப்பட்டது.

இப்பயிற்சி நெறி மூலம் பட்டதாரிகளுக்கு ஆளுமை விருத்தி, நிர்வாக முகாமைத்துவம், கணனிசார் தகவல் தொழில்நுட்பம், ஆங்கில மொழி விருத்தி, தலைமைத்துவம், தொடர்பாடல் திறன் விருத்தி, மென்திறன் விருத்தி தொடர்பான பயிற்சிகள் ESOFT விரிவுரையாளர்கள் மற்றும் தொழில்சார் வல்லுநர்களினால் எதிர்வரும் 3 வாரங்கள் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி பட்டறை மூலம் சுமார் 120 இற்கு மேற்பட்ட பட்டதாரிகள் பயனடையவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-8)

# விழிப்புக்குழுவால் பிடிக்கப்பட்ட திருடன் பொலிஸாரிடம் ஒப்படைப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி வடக்கு விழிப்புக் குழுவினரால் திருடன் மடக்கிப் பிடிக்கப்பட்டு சாவகச்சேரி விசேட குற்றப் புலனாய்வு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

குறித்த திருடன் நேற்று முன்தினம் சாவகச்சேரி வடக்கு படையாண்டான் முருகமூர்த்தி கோவிலுக்கு அருகாமையில் சிறுமி ஒருவர் தனித்திருந்த வீடொன்றினுள் நுழைந்து கையடக்கத் தொலைபேசி ஒன்றினைத் திருடிச் சென்ற போது சிறுமி கூக்குரல் எழுப்பியபோது அப் பகுதி விழிப்புக்குழு மற்றும் அயலவர்கள் இணைந்து திருடனை மடக்கிப்பிடித்து விசாரித்துள்ளனர்.

இதன்போது குறித்த நபர் முன்னுக்குப்பின் முரணான கருத்துக்களைத் தெரிவித்ததால் அவரை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். (5-4-30)

# கஞ்சா ஒரு மூலிகை;
# செய்கைக்கு அனுமதியுங்கள்
## தேசிய மருத்துவர்களின் ஒன்றிணைந்த சங்கம் கோரிக்கை

(கொழும்பு)

**கஞ்சா ஒரு மூலிகை என்ற வகையில் உலக சந்தையில் பாரிய கேள்வி காணப்படுவதால் அதனை மருந்திற்காக பயிர்செய்ய தேசிய பயிர்ச் செய்கையாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என தேசிய மருத்துவர்களின் ஒன்றிணைந்த சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அந்த சங்கம் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளது.

எமது நாடு கஞ்சா பயிர் செய்கைக்கு மிகவும் பொருத்தமான நாடு என்பதால், அதனை அனுமதிப்பத்திரத்துடன் செய்ய தேவையான வேலைத்திட்டத்தை அரசு மேற்கொள்ள வேண்டும் எனச் சுட்டிக் காட்டியுள்ளது. (ஐ-4)


**சேவை**

நீங்கள் அடகு வைத்த மீட்டெடுக்க முடியாத நகைகளை எமது நிறுவனத்தின் ஊழியர்கள் மூலமாக நீங்கள் அடகு வைத்த நிறுவனத்திற்கு வருகை தந்து மீட்டு எடுத்து அதற்கான பெறுமதிப் பணம் அவ்விடத்திலேயே தரப்படும். நாடளாவிய ரீதியில் சிநேகபூர்வமான சேவை. **AAA Gold Center** (C-1034)

**076 568 4346**


## ஆர்ப்பாட்டத்தின் போது பார்வையிழப்பு; இராணுவ வீரரின் மனுவை விசாரிக்க முடிவு

(கொழும்பு)

ஆர்ப்பாட்டமொன்றின்போது கண் பார்வையை இழந்த இராணுவ வீரர் 10 மில்லியன் ரூபா நட்டஈடு கோரி தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரிக்க உயர் நீதிமன்றம் முடிவு செய்துள்ளது. மாத்தறை பகுதியைச் சேர்ந்த நிஷாந்த மிஹிராஜ் என்பவரே இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

கடந்த 2017 நவம்பர் 7 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் போது பொலிஸார் மேற்கொண்ட கண்ணீர் புகை தாக்குதலினால் தான் கண் பார்வையை இழந்ததாகவும் குறித்த நபர் தனது மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த மனு நேற்றுக் காலை நீதிபதிகளான பிரியந்த ஜெயவர்த்தன, விஜித் மலல்கொட மற்றும் யசந்த கொட்டேகொட ஆகிய நீதியரசர்கள் முன்னிலையில் விசாரணைக்கு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)


NOTICE

UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
OPERATIONAL TECHNICAL SECRETARIAT (OTS)
WORLD BANK FUNDED ACCELERATING HIGHER EDUCATION EXPANSION AND DEVELOPMENT (AHEAD) OPERATION

**WALK – IN - INTERVIEW**

POST OF PROJECT ASSISTANT CUM RESEARCH ASSISTANT (FULL TIME) – ON CONTRACT BASIS – 01

RESEARCH INNOVATION AND COMMERCIALIZATION (RIC) – FACULTY OF ENGINEERING

Walk in Interview for the above post (Full Time) – On Contract Basis will be held on 29.09.2020 – 9.00 Am to 12.00 Noon at the Staff Development Center, Seminar Hall of the University of Jaffna.

Eligible Candidates are requested to be present for an interview with self-prepared application in the prescribed format along with relevant original certificates and the National Identity Card (NIC) on the date and the time mentioned above.

For further details please visit the University of Jaffna website www.jfn.ac.lk.

Registrar (C-322)



# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: சித்திரை 4<br>கி.பா: செவ் 11 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. பிரான்ஸில் வேலை செய்கின்றார்.<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/7595 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 1<br>கி.பா: 79 செவ் 1 இல் உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L, ACCA, வங்கியாளர்.<br>எதிர்பார்ப்பு: வங்கியாளர், விரிவுரையாளர், பொறியியலாளர் போன்ற உத்தியோகத்தர்கள். தீவுப் பகுதியினர் வேண்டாம்.<br>தொ.இ: G/9183 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 3<br>கி.பா: செவ் 9 இல்<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. டுபாயில் வேலை செய்கின்றார்<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/7598 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம் கி.பா: செவ் 1 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமைதொழில்க.பொ.த.உ.த வங்கியாளர்.<br>எதிர்பார்ப்பு: வங்கியாளர், விரிவுரையாளர், பொறியியலாளர் போன்ற உத்தியோகத்தர்கள். தீவுப் பகுதியினர் வேண்டாம்.<br>தொ.இ: G/9184 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: செவ் 11 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: க.பொ.த.உ.த. தனியார் நிறுவனத்தில் வேலை செய்கின்றார்.<br>எதிர்பார்ப்பு: உத்தியோகமுள்ள பெண்<br>தொ.இ: B/7599 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: பூசம் 2<br>கி.பா: 16 சூரி.செவ் 5 இல் உயரம்: 5'<br>தகைமை/தொழில்: பட்டதாரி. பட்டதாரி பயிலுநர்.<br>எதிர்பார்ப்பு: தகுந்த மணமகன்<br>தொ.இ: G/9186 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 2<br>கி.பா: செவ் 3 இல்<br>தகைமை/தொழில்: க.பொ.த.சா.த. சாரதி<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/7601 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 4<br>கி.பா: 6 செவ் 12 இல் உயரம்: 5'<br>தகைமை/தொழில்: MBBS, Doctor.<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer.<br>தொ.இ: G/9189 |

**கல்யாணமாலை**
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



# மணி விழா வாழ்த்து
(16.09.2020)

கடந்த முப்பத்து மூன்று வருடகால கல்விச் சேவையில் எமது பாடசாலையில் எட்டு வருடங்களாக, ஆசிரியராகப் பிரதி அதிபராக கல்விப் பணியாற்றி இன்றுடன் ஓய்வு பெற்றுச் செல்லும்

**திருமதி.நளாயினி சந்திரசேகரன்**
(B.A.(Hons) PGDE)



சேவை விபரம்
மு/புனிற் 2 வவுனிக்குளம் அ.த.க. பாடசாலை
14.12.87 - 10.03.1989
மு/ஒட்டுசுட்டான் ம.வித்தியாலயம்
11.03.1989 - 31.12.2003
யா/சென்ஜேம்ஸ் மகளிர் பாடசாலை
01.01.2004 - 09.10.2012
யா/சன்மார்க்க மகா வித்தியாலயம்
10.10.2012 - 15.09.2020

Congratulations

குணமெனும் குவலயத்துயர் ஆதார சுருதியாக
இங்கிதமாய் கதைபேசி பாடசாலையில்
பக்குவமாய் கடமை பல புரிந்தீர் – குடும்ப
சீருடன் என்றும் பல்லாண்டு வாழ அகவை
அறுபதில் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்
நீடூழி வாழி !!!

(C-315)


**பாடசாலை சமூகம் யா/சன்மார்க்க மகா வித்தியாலயம்**

# மரக் கடத்தலில் ஈடுபடுவோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்

## பிரதிப் பொலிஸ்மா அதிபர்

(நெளுக்குளம்)

**இயற்கை வளங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் சட்ட விரோத மரக்கடத்தலை மேற்கொண்டு வரும் குழுவினருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுப்பதற்கு பொதுமக்கள் ஒத்துழைக்கவேண்டும் என்று வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் தம்மிக்க பிரியந்த தெரிவித்துள்ளார்.**



வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கும் வவுனியா மாவட்ட ஊடகவியலாளர்களுக்கு இடையே இடம்பெற்ற மாதாந்த சந்திப்பின் போது வன்னிப்பிராந்தியத்தில் இடம்பெற்று வரும் சட்டவிரோத மரக்கடத்தலைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக விளக்கமளிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இயற்கை வளங்களை அழிக்கும் செயற்பாடுகளை மேற்கொண்டு வரும் சட்டவிரோத மரக் கடத்தலில் ஈடுபடுவோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இச்செயலை செய்பவர்களை பொதுமக்கள் பொலிஸாருக்கு இனங்காட்ட வேண்டும் அல்லது எமது அவசர அழைப்பு தொலைபேசிக்கு தெரிவித்தால் நாங்கள் அவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கையினை மேற்கொள்வோம் .

மரங்களை அழிப்பதால் எதிர்காலத்தில் ஏற்படும் அழிவுகளை பொதுமக்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

தமது பகுதிகளில் இடம்பெறும் சட்டவிரோத மரக்கடத்தலை முறியடிக்க பொதுமக்கள் எம்முடன் இணைந்து பணியாற்ற வேண்டும். இன்னும் சில தினங்களில் மரக்கடத்தல் மேற்கொள்ளும் குழுவினருக்கு எதிராக கடுமையான நடவடிக்கை பொலிஸாரால் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (5-4-299)



**மந்துவில் பகுதியில் இலங்கை இராணுவத்தினரின் விமானப்படை விமானங்கள் கடந்த 1999.09.15 அன்று நடத்திய மிலேச்சத்தனமான தாக்குதலில் கொல்லப்பட்ட 24 உறவுகளின் 21 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு நேற்று உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது. தாயக உறவுகள் நினைவேந்தல் அமைப்பின் இணைப்பாளர் ச. ரூபனின் ஏற்பாட்டில் இந் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.**

**(படம்:-பனிக்கன்குளம் செய்தியாளர்)**

# காணிப்பிரச்சினை தீர்ப்பதில் தாமதம் உத்தியோகத்தர் பற்றாக்குறையே

(நெளுக்குளம்)

வவுனியா பிரதேச செயலகத்தின் காணிக்கிளையில் உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை இருப்பதனால் காணி தொடர்பான விடயங்களை தீர்ப்பதில் சில சிக்கல்கள் இருப்பதாக வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசன் தெரிவித்தார்.

வவுனியாவில் காணிக்கான உறுதிப்பத்திரங்கள் மற்றும் அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்வதில் பொதுமக்கள் சந்திக்கும் பிரச்சினைகள் தொடர்பாக வவுனியா பிரதேச செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தின் போது மக்கள் பிரதிநிதிகளால் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

இதன்போதே பிரதேச செயலாளர் மேற்கண்டவாறு பதிலளித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், தமது பிரதேச செயலகத்தின் காணிக்கிளையில் காணி உத்தியோகத்தர் பதவி வெற்றிடமாக உள்ளது.

காணிக்கிளையில் மாத்திரமே இவ்வாறான வெற்றிடங்கள் உள்ளன.

எனவே ஆளணி விடயங்கள் தொடர்பாக மாகாண காணி ஆணையாளருக்கு நான் கோரிக்கைகளை முன் வைத்திருக்கின்றேன்.

எனவே பாராளுமன்ற உறுப்பினர்கள், இணைத் தலைவர்கள் இந்த வெற்றிடத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

இதற்கான கோரிக்கைக் கடிதம் ஒன்றை வழங்குமாறு ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர் திலீபன் கேட்டுக்கொண்டார். (5-4-299)




# காணி தொடர்பான விடயங்களில் காலதாமதம் செய்ய வேண்டாம்

## பா.உ.வினோநோகராதலிங்கம்

(நெளுக்குளம்)

காணி தொடர்பான விடயங்களில் காலதாமதத்தினை ஏற்படுத்தாத வகையில் பிரதேச செயலகங்கள் செயற்பட வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் தெரிவித்தார்.

வவுனியா பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் பிரதேச செயலகத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம்இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், காணி தொடர்பான விசேட வர்த்தமானி ஒன்று அண்மையில் வெளியிடப்பட்டது. எனவே இயலுமானவரையில்அனுமதிப் பத்திரங்களை வழங்குவதில் காலதாமதம் ஏற்படாத வகையில் பிரதேச செயலகங்கள் செயற்பட வேண்டும்.


சில பிரச்சினைகளை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் அல்லது திணைக்களங்களின் தலைவர்கள், உயர் அதிகாரிகளால் தீர்க்க முடியவில்லை. எனவே அதனை தீர்த்து தாருங்கள் என்று கூறி பொதுமக்கள், பாராளுமன்ற உறுப்பினர்களிடமும், அரசியல்வாதிகளிடமும் வருகின்றனர்.

இவ்வாறான பல பிரச்சினைகளை திணைக்கள மட்டத்திலேயே தீர்த்து வைக்க முடியும்.

எனவே அவற்றை இயலுமானவரையில் தீர்த்து வையுங்கள். நாங்கள் அந்த விடயங்களில் தலையிடுவது பொருத்தமற்ற விடயமாகவே இருக்கும். அப்படியான விடயங்கள் எங்களிடம் வரும்போது வீணான பிரச்சினைகளை உருவாக்கும் என்று எமக்கு நன்கு தெரியும்.

அத்துடன் அந்தப் பிரச்சினையை தீர்க்கமுடியாது விடில் பொதுமக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய காரணத்தை உயர் அதிகாரிகள் சொல்லவேண்டும் எனவும் தெரிவித்தார். (5-4-299)

# டிப்பர்-லொறி நேருக்கு நேர் மோதி விபத்து



(நெளுக்குளம்)

வவுனியா ஈரட்டை நவகம பகுதியில் நேற்று காலை இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த ஒருவர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மதவாச்சியிலிருந்து வவுனியா நோக்கி வந்த டிப்பர் எதிரே வந்த லொறியுடன் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் டிப்பரின் சாரதியே படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார்.

விபத்து தொடர்பாக ஈரட்டை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (5-4-299)

# இராசிபலன்

16.09.2020
ஆவணி 31, புதன்கிழமை
சதுர்த்தசி முன்னிரவு 7.22 மணிவரை
மகம் பிற்பகல் 12.10 மணிவரை
சுபநேரம் 4.33-6.03 மணிவரை
இராகுகாலம் 12.03-1.33 மணிவரை
சந்திராஷ்டமம் திருவோணம்,அவிட்டம்
போதாயன அமாவாசை

வளவன்


மேஷம்

சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், பிள்ளைகள் குடும்ப பொறுப் புணர்ந்து நடந்து கொள்வர், வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள்.


ரிஷபம்

தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக் கும் நாள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.


மிதுனம்

பாகப் பிரிவினைகள் சுமுகமாக முடியும், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண் பீர்கள்.


கடகம்

இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பணத் தேவை கள் எளிதில் பூர்த்தியாகும், வாக்கு மேன்மையுண்டு.


சிம்மம்

கற்பனை மிகுதியான நாள், குடும் பத்தில் சுமைகளும் பொறுப்புக்களும் வந்து சேரலாம், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.


கன்னி

வழிபாட்டில் நம்பிக்கை கூடும் நாள், அலைச்சல்கள் அதிகரித்தாலும் ஆதாய மும் பெறுவீர்கள், எடுத்த காரியங் களை முடிக்க அதிக பிரயாசை காட் டும் சூழ்நிலை உருவாகும்.


துலாம்

வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.


விருச்சிகம்

தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும் நாள், செயற்பாடுகளில் தீவிரம் காட் டுவீர்கள்.


தனுசு

வீண் பழிகள் அகல விரைந்து நட வடிக்கை எடுப்பீர்கள், பூர்வீகச் சொத் துக்களால் நன்மையுண்டு, தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர் கள், ஆன்றோர் சந்திப்புண்டு.


மகரம்

உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், வழிபாட்டால் திரு ப்தி காண வேண்டிய நாள், தொழி லில் கவனத்துடன் செயற்படுவது நல்லது.


கும்பம்

குடும்பத்தாரிடையே மகிழ்ச்சி அதிக ரிக்கும், கல்யாணக் கனவுகள் நன வாகலாம், காரிய அனுகூலமுண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், போசன சுகமுண்டு.


மீனம்

உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், ஆரோக்கியம் சீரா கும், செய்தொழில் மேன்மையுண்டு, வருமானம் திருப்தி தரும்.

நீ நினைத்தால் எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்கலாம்.

# மீள் புதுப்பிக்கத்தக்க சக்திகளினூடாக மின்னுற்பத்தித் திட்டங்களை வகுக்குமாறு ஜனாதிபதி ஆலோசனை

(கொழும்பு)

**2030 ஆம் ஆண்டாகும் போது மொத்த மின்சாரத் தேவையின் 70 வீதத்தை மீள் புதுப்பிக்கத்தக்க சக்திகளினூடாக உற்பத்தி செய்வதற்கான திட்டங்கள் வகுக்கப்பட வேண்டுமென ஜனாதி பதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.**



சூரிய, காற்று மற்றும் நீர் மின் உற்பத்தி திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் எதிர் கால நடவடிக்கைகள் தொடர் பில் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது ஜனாதிபதி இதனைத் தெரிவித் தார்.

மேலும் இத்திட்டத்திற்கான அனுமதியை வழங்கும் அதி காரம் கொண்ட நிறுவனங்கள், சாத்தியமான அறிக்கைகளை தயாரிக்க வேண்டுமெனவும் திட்டங்களுக்கான அனுமதி கோரப்பட்ட 14 நாட்களுக்குள் பதில் வழங்கப்படாதவிடத்து, அந்தத்திட்டத்திற்கான அனு மதி கிடைத்ததாகவே கருதப்படு மெனவும் அவர் தெரிவித்தார்.

மீள் புதுப்பிக்கத்தக்க சக்தி உற்பத்திக்கு அரசினால் முன் னுரிமை வழங்கப்படுவதாக தெரிவித்துள்ள ஜனாதிபதி, அதற்கான அனைத்து ஒத்து ழைப்புகளையும் வழங்கு மாறு அனைத்து நிறுவனங் களுக்கும் சுற்றறிக்கை அனு ப்புமாறும் ஆலோசனை வழ ங்கினார்.

ஒப்பந்த அடிப்படையில் முன் னெடுக்கப்படும் அனைத்து திட் டங்களும் 3 மாதங்களுக்குள் ஆரம்பிக்கப்படாவிட்டால் வழ ங்கப்பட்ட உரிமங்கள் இரத்துச் செய்யப்படுமெனவும் ஜனாதி பதி தெரிவித்தார். (ஐ-4)

# 20 ஐ தோற்கடித்து ஜனநாயகத்தை நிலைநாட்டுவோம்

## சம்பிக்க திட்டவட்டம்

(கொழும்பு)

20 ஆவது திருத்தச்சட்ட மூலத்தை தோற்கடித்து ஜன நாயகத்தை மீண்டும் நிலை நாட்டுவோம் என பாராளு மன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

கொழும்பில், நேற்று முன் தினம் திங்கட்கிழமை ஊடக ங்களுக்கு கருத்துத் தெரிவிக் கும் போது இதனைத் தெரிவித் தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில், "20 ஆவது திருத்தச்சட்ட மூலம் தொடர்பாக, எதிர்வரும் 21 ஆம் திகதி கூடி ஐக்கிய மக்கள் சக்தி ஆராயவுள்ளது.



20 ஆவது திருத்தச்சட்ட மூலத்தை நிச்சயமாக நாம் தோற்கடித்து, மக்களுக்கு ஜன நாயகத்தையும் உரிமையை யும் மீண்டும் நிலைநாட்டு வோம்.

பாராளுமன்றத்திற்கு கிடை த்த மக்கள் ஆணையை நாம் பாதுகாக்க வேண்டும். இது தொடர்பாக ஐக்கிய மக்கள் சக்தியினர் தொடர்ந்தும் ஆராய் ந்து வருகிறோம் என தெரி வித்தார். (ஐ-4)

# கோட்டாவை காப்பாற்றியது நான் தான்

## நாமல் குமார வெளிப்படுத்தல்

(கொழும்பு)

கடந்த அரசாங்கத்தின் கால த்தில் தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை கொலை செய்யும் திட்டத்தில் இருந்து அவரைத் தானே காப் பாற்றியதாக சர்ச்சைக்குரிய குரல் பதிவுகளை வெளியிட்ட நாமல் குமார தெரிவித்தார்.

அன்று தான் வெளியிட்ட தகவல்கள் காரணமாக தற் போது கோட்டாபய ராஜபக்ஷ நாட்டின் ஜனாதிபதியாக இருப்ப தாகவும் இது தொடர்பாக தான் மிகவும் மகிழ்ச்சியடைவதாக வும் சுட்டிக்காட்டினார்.

கடந்த நல்லாட்சிக் கால



த்தில் அரச பாதுகாப்பு மிக வும் பலவீனமாக இருந்தது எனவும் இதன் காரணமாகவே ஜனாதிபதியை கொலை செய்யும் சதித்திட்டத்தை கூட தன்னால் வெளியிட முடிந்தது எனவும் அவர் தெரிவித்தார்.


புதிய அரசாங்கத்தின் கீழ் குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தின் தற்போ தைய செயற்பாடுகள் குறித்து திருப்தியடைய முடியும்.

ஆனாலும் மிக முக்கிய தகவலை வெளியிட்ட தனக்கு இதுவரை பாதுகாப்பு கிடை க்கவில்லை எனவும் இலங்கை சட்டத்தில் உள்ள குறை பாடுகளே இதற்குக் காரணம் எனவும் அவர் மேலும் தெரி வித்தார். (ஐ-4)

# உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகமும் பணிப்பொறுப்புகளும் - ஒரு தொகுப்பு

19

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர்–எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



வருடாந்தம் விதிக்கப்பட வேண்டிய மேற்படி வரிகள் முறையான சபை இணக்கப்பாட்டின் கீழ் விதிக்கப்பட வேண்டியிருப்பதுடன் சட்டரீதியாக செல்லுபடியாவதற்கு பொருள்கோடல் தொடர்பான கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க மேற்படி வரி விதிப்பு தொடர்பான அறிவித்தல் மற்றும் சபை முன்மொழிவு மும்மொழியிலும் இலங்கை அரசாங்கத்தின் வர்த்தமானி மூலம் அறிவிக்கப்படல் வேண்டும்.

1. வாடகை (Rent)

மாநகர சபைகள் மற்றும் நகர சபைகள் பிரதான வருமானம் விடய இலக்கம் - 320

பிரதேச சபைகளின் பிரதான வருமான விடய இலக்கம் - 20

இவ்வருமானத் தலைப்பின் கீழ் கொண்டுவரப்படும் வாடகை வகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ளன.

அ. குடியிருப்பு வீடுகள் - வாடகை

விதிக்கப்படுதல் மற்றும் அறவிடலுக்கு உரிய சட்ட ஏற்பாடுகள் - மா.ந.ச 188(1)(f) ந.ச 129(g),130(1) பி.ச 108(h),109 நடைமுறைப்படுத்த முறையான உடன்படிக்கையொன்றுக்கு வருதல்.

ஆ. விற்பனை நிலையங்கள் மற்றும் கடைகள் - வாடகை

விதிக்கப்படுதல் மற்றும் அறவிடலுக்கு உரிய சட்ட ஏற்பாடுகள் - மா.ந.ச 40(1)(f), 40(1)(u), (iv) ந.ச 36(e)(i), 36(e)(ii) பி.ச 19 (1)(xii) மற்றும்பிரதேச சபை நிதி மற்றும் நிர்வாக விதிகள் 76. நடைமுறைப்படுத்த துணை விதி விதிக்கப்படல் மற்றும் முறையான உடன்படிக்கையொன்றுக்கு வருதல்.

இ. குத்தகைக் கூலி வாரச் சந்தை-காணிகள்- கட்டடங்களை குத்தகைக்கு விடல்


அறவிடலுக்கு உரிய சட்ட ஏற்பாடுகள் - மா.ந.ச 40(1)(f), 40(1)(u), (iv) ந.ச 36(e)(i), 36(e)(ii) பி.ச 19 (1)(xii) மற்றும் பிரதேச சபை நிதி மற்றும் நிர்வாக விதிகள் 76. நடைமுறைப்படுத்த துணை விதி விதிக்கப்படல் மற்றும் முறையான உடன்படிக்கையொன்றுக்கு வருதல்.

ஈ. தற்காலிகமாக கடை வாடகைக்கு விடல்

அறவிடலுக்கு உரிய சட்ட ஏற்பாடுகள் - மா.ந.ச 40(1)(f), 40(1)(u), (iv) ந.ச 36(e)(i), 36(e)(ii) பி.ச 19 (1)(xii) மற்றும்பிரதேச சபை நிதி மற்றும் நிர்வாக விதிகள் 76. நடைமுறைப்படுத்த துணை விதி விதிக்கப்படல் மற்றும் முறையான உடன்படிக்கையொன்றுக்கு வருதல்.

உ. வாகனத் தரிப்பிடம்

அறவிடலுக்கு உரிய சட்ட ஏற்பாடுகள் - மா.ந.ச 272 (32) ந.ச 157 (14A) பி.ச 126 (vii)(h) நடைமுறைப்படுத்த துணை விதி விதிக்கப்படல் மற்றும் முறையான உடன்படிக்கையொன்றுக்கு வருதல்.




உள்ளூராட்சி மன்றங்கள் வாடகை மூலம் வருமானம் தேடல்

2. வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் (Trade Licence)

மாநகர சபைகளின் மற்றும் நகர சபைகளின் பிரதான வருமானம் விடய இலக்கம் - 330

பிரதேச சபைகளின் பிரதான வருமான விடய இலக்கம் - 30

இவ்வருமானத் தலைப்பின் கீழ் கொண்டுவரப்படும் அனுமதிக்கட்டணங்களின் வகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ளன.

அ. வியாபார அனுமதிப்பத்திர கட்டணம்

சட்ட அதிகாரம் :- மாநகர சபைச் சட்டம்- 247(A), 247(BB) மற்றும் 308 ஆம் பிரிவுகள் நகரசபைச் சட்டம்-162(1), 164(1), 164(2) மற்றும் 219 ஆம் பிரிவுகள் பிரதேச சபை சட்டம்-147(1), 149 மற்றும் 213. கட்டணம் விதித்தல் தொடர்பாக வருடாந்தம் சபையின் முறையான இணக்கப்பாட்டின் கீழ் வரி விதிக்கப்பட வேண்டும் என்பதுடன் அதற்கு முன்னதாக துணை விதி ஆக்கப்பட வேண்டும்.

ஆ. விளம்பரப் பதாகைக் கட்டணம்

சட்ட அதிகாரம் :- மாநகர சபைச் சட்டம்- 272(6) நகரசபைச் சட்டம்-157(7) (f) பிரதேச சபை சட்டம்- 126(vii) (f). கட்டணம் விதித்தல் தொடர்பாக வருடாந்தம் சபையின் முறையான இணக்கப்பாட்டின் கீழ் வரி விதிக்கப்பட வேண்டும் என்பதுடன் அதற்கு முன்னதாக துணை விதி ஆக்கப்பட வேண்டும்.

இ. சூழல் அனுமதிப்பத்திர கட்டணம்

சட்ட அதிகாரம் :- மத்திய சுற்றாடல் அதிகார சபைச் சட்டம். துணை விதி ஆக்கப்பட வேண்டும்.

ஈ. பிரசித்தமான அரங்குகளுக்காக வழங்கப்படும் அனுமதிப்பத்திர கட்டணங்கள்

சட்ட அதிகாரம் :- பிரசித்தமான காட்சிப்படுத்தல்கள் தொடர்பான கட்டளைச் சட்டம். துணை விதி ஆக்கப்பட வேண்டும்.

உ. காணித் துண்டாடல் திட்டமிடல் மற்றும் கட்டட நிர்மாணம் தொடர்பாக வெளியிடப்படும் அனுமதிப்பத்திரம்

சட்ட அதிகாரம் :- 1978 ஆம் ஆண்டு 41 ஆம் இலக்கம் கொண்ட நகர சபை அதிகார சட்டத்தின் கீழ் வருகின்ற கட்டளைகள் மற்றும் வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் விதிகள்

ஊ. மாடு அறுப்பதற்கான அனுமதிப் பத்திரம்

சட்ட அதிகாரம் :- மாடு அறுத்தல் கட்டளைச் சட்டம். துணை விதி ஆக்கப்பட வேண்டும்.

எ. சனசமூக மண்டபங்கள் அனுமதிப்பத்திர அடிப்படையில் அறவிடப்படுகின்ற கட்டணம்

சட்ட அதிகாரம் :-1975 ஆம் ஆண்டு 17 ஆம் இலக்க சமூக கூடங்களுக்கான கட்டளைகள் சட்டம். துணை விதி ஆக்கப்பட வேண்டும்.

ஏ. ஏலம் விற்பனையாளர்களுக்கும் தரகர்களுக்கும் வழங்கப்படும் அனுமதிப்பத்திர அடிப்படையில் அறவிடப்படுகின்ற கட்டணம்

சட்ட அதிகாரம் :- ஏல விற்பனையாளர் மற்றும் தரகர்கள் தொடர்பான கட்டளைச் சட்டம். துணை விதி ஆக்கப்பட வேண்டும்.

3. சேவைகளுக்கான கட்டணங்கள்

மாநகர சபைகள் மற்றும் நகர சபைகள் பிரதான வருமானம். விடய இலக்கம் - 340

பிரதேச சபைகள் பிரதான வருமானம் விடய இலக்கம் - 40

உள்ளூராட்சி மன்றங்களினால் வழங்கப்படுகின்ற சேவைகளை அடிப்படையாகக் கொண்டு இக்கட்டணங்கள் அறவிடப்படலாம்.

இவ்வருமானத் தலைப்பின் கீழ் கொண்டுவரப்படும் சேவைக் கட்டணங்களின்- வகைகள் கீழ்க்காட்டப்பட்டுள்ளன.

அ. அடகுப் பதிவு

சட்ட அதிகாரம் :- மாநகர சபைச் சட்டம்- 272(7) (C) நகரசபைச் சட்டம்- 157(5)(D) பிரதேச சபை சட்டம்- 126(g)(d). துணை விதி ஆக்கப்படல் அவசியமாகும்.

ஆ. வீதிரேகை (street line) சான்றுப்பத்திரம் வழங்குதல்


சட்ட அதிகாரம் :- மாநகர சபைச் சட்டம்- 60, 272(2)(g) நகரசபைச் சட்டம்- 157(8)(f) பிரதேச சபை சட்டம்- 126(viii) (h). துணை விதி ஆக்கப்படல் அவசியமாகும்.

இ. தீயணைக்கும் சேவை

சட்ட அதிகாரம் :- மாநகர சபைச் சட்டம்- 272(18), 272(26), 272 (28) (f) நகரசபைச் சட்டம்- 157(11) (n) பிரதேச சபை சட்டம்- 126(xii)(n). துணை விதி ஆக்கப்படல் அவசியமாகும்.

ஈ. மயானபூமி மற்றும் தகனச்சாலை கட்டணம்

சட்ட அதிகாரம் :- மாநகர சபைச் சட்டம்- 267(1), 272(13) மற்றும் மயானபூமி கட்டளைகள் சட்டம் நகர சபைச் சட்டம்- 153, 157(13) மற்றும் மயானபூமி கட்டளைகள் சட்டம் பிரதேச சபை சட்டம்- 126(xiv) மற்றும் மயானபூமி கட்டளைகள் சட்டம். துணை விதி ஆக்கப்படல் அவசியமாகும்.




உள்ளூராட்சி மன்றங்கள் அனுமதிப்பத்திரம் வழங்கல் மூலம் வருமானம் தேடல்

(தொடரும்...)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# துளசியும், எலுமிச்சம் துளசியும்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

**துளசி**
Botanical Name - Ocimum sanctum
Family - Lamiaceae

**எலுமிச்சம் துளசி**
Botanical Name - Ocimum gratissimum
Family - Lamiaceae

துளசியில் எட்டு வகைகள் உண்டு. அவையாவன:- வெண்துளசி, கருந்துளசி, எலுமிச்சம் துளசி, நாய்த்துளசி, கல்துளசி, காட்டுத்துளசி, பேய்த்துளசி, நிலத்துளசி என்பனவாகும்.

இவ் எட்டு வகையும் கற்பூரவாசனை கொண்டவை. இவை ஒவ்வொன்றும் வெவ்வேறு வகை மருத்துவக் குணங்களைக் கொண்டவை.




இவற்றில் காட்டுத் துளசிக்கு கஞ்சாற்கோரை என்ற பெயரும், பேய்த் துளசிக்கு கழுவைத்தும்பை என்ற பெயரும், கருந்துளசிக்கு கிருஷ்ண துளசி என்னும் பெயரும் உண்டு.

**துளசி மிகச் சிறந்த கிருமிநாசினி**

கோவில்களில் துளசி தளிரையும் துளசி கலந்த நீரையும் தருவதற்கு காரணம் தொற்றுக் கிருமிகளை அழிக்கும் ஆற்றல் பெற்றிருப்பதேயாகும்.

வீடுகளிலும் துளசிமாடம் அமைத்து துளசி வளர்வினால் நச்சுப்பூச்சிகள், தொற்றுநோய்க் கிருமிகள் ஆகியவை வராமல் பாதுகாக்கும் என்பதே ஒரு காரணமாகும்.

துளசியிலையை பாலில் இட்டுக் காய்ச்சிப்பருக பாலிலுண்டான குற்றங்கள் விலகும். சளியை அல்லது கபத்தை சேர்க்காமல் தடுக்கும்.

துளசி இலைகளில் கைப்பிடியளவு எடுத்து 200 மில்லி குளிர்ந்த நீரில் ஓர் இரவு முழுவதும் ஊற விட்டு காலையில் அவ் இலைகளையும் நீரையும் உட்கொள்வதால் சளி, இருமல் நீங்கும்.

துளசி விதைகளை குளிர்ந்த நீரில் அரைத்து 5 கிராம் அளவில் உட்கொள்ள பெண்களுக்கு ஏற்படும் வெள்ளை சாய்தல் நீங்கும். ஒரு மண்டலம் அதாவது 48 நாட்கள் தொடர்ச்சியாக சாப்பிடலாம்.

துளசியைக் கசக்கி முகத்தில் தேய்த்துக்கொண்டு இரவில் படுத்து காலையில் எழுந்து முகம் கழுவினால் முகம் அழகு பெறும்.

துளசியிலைச்சாறு 15 மில்லி, தூயதேன் 15 மில்லி கலந்து குடித்துவந்தால் படிப்படியாக உடற்பருமன் குறையும். துளசிச்சாறு 10 மில்லி, இஞ்சிச்சாறு 10 மில்லி கலந்து குடித்து வந்தால் ஜலதோஷம் நீங்கும். குழந்தைகட்கு 5 மில்லி அளவாக குறைத்து பயன் படுத்தலாம்.

துளசிச்சாறு, வெண்ணெய், மிளகுத்தூள் மூன்றையும் சம அளவு எடுத்து கலந்து சாப்பிட்டால் வாதத்தால் ஏற்படும் வீக்கம் குணமாகும்.

துளசியிலைகளுடன் கஸ்தூரி மஞ்சள் சேர்த்தரைத்து உடல்முழுவதும் பூசி குளிர்ந்த நீரில் குளித்து வந்தால் தோல் சம்பந்தமான நோய்கள் குணமாகும்.

துளசியை சீரகம் சேர்த்தரைத்து 28 மி.கிராம் அளவு குழந்தைகட்கு கொடுத்தால் வயிற்று உப்பிசம் குறையும்.

**துளசி-10 கிராம்**
**கடுகுரோகிணி - 50 கிராம்**
**மிளகு தூள் - 12 கிராம்**
**பாகல் இலை - 15 கிராம்**

ஆகியவற்றை தண்ணீரில் நன்றாக அரைத்து 130 மி.கிராம் உருண்டையாக உருட்டி மலேரியாக் காய்ச்சலுக்கு 2 உருண்டை வீதம் தினம் 3 வேளை எடுக்க காய்ச்சல் அல்லது சுரம் தணியும்.

10 மில்லி துளசிச்சாறுடன் 100 மில்லி காய்ச்சிய பசுப்பால் அருந்தினால் நீர்க்கடுப்பு குறையும்.

துளசிச்சாறு, எலுமிச்சம் பழச்சாறு இரண்டையும் சமஅளவு எடுத்து அதில் வேப்பிலைச்சாறு சேர்த்து தலையில் தேய்த்து பத்து நிமிடம் ஊறவைத்துக் குளித்தால் பேண் தொல்லை நீங்கும்.

துளசியிலைகளை அரைத்து தேங்காய் எண்ணெய் சேர்த்து அரைத்து புண்கள் மீது தடவினால் அவை விரைவில் ஆறும்.

துளசியை உலர்த்தி பொடித்து 5 கிராம் அளவு தேனில் கலந்து குடித்து வந்தால் விஷங்கள் இறங்கும்.

10 துளசியிலைகளை வெறும் வயிற்றில் மென்று தின்று வெந்நீர் குடித்தால் வயிற்றுவலி குணமாகும்.

துளசிச்சாறில் தேன் கலந்து நான்கு மணி நேரத்திற்கு ஒருமுறை குடித்து வந்தால் அடிக்கடி வாந்தி எடுப்பது குணமாகும்.




துளசிச்சாறுடன் சீரகக் குடிநீர் சம அளவு கலந்து குடித்து வந்தால் மாதவிலக்கு கோளாறுகள் நீங்கும்.

துளசியுடன் புதினா இலைகளை சேர்த்து தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து வடிகட்டி அதில் தேன் கலந்து காலையில் வெறும் வயிற்றில் குடித்து வந்தால் குடற்புண் தொடர்பான பிரச்சினைகள் நீங்கும்.

துளசிச்சாறுடன் எலுமிச்சம்பழச்சாறு சேர்த்து அரைத்து படர்தாமரைப் புண்கள் மீது தடவினால் விரைவில் குணமாகும்.

துளசிச்சாறு 5 மில்லி அளவு தினமும் 48 நாட்கள் தொடர்ந்து குடித்து வந்தால் கல்லீரல் நோய்கள் வராமல் ஓரளவு தடுக்கக் கூடியதாக இருக்கும்.

துளசியிலைகளை நன்றாக மென்று சாப்பிட்டு வர அஜீரணக் கோளாறுகள் நீங்கும். துளசி, வேப்பிலை இரண்டையும் உலர்த்தி பொடி செய்து எலுமிச்சம் பழச்சாறுடன் கலந்து பருக்களால் ஏற்படும் வடுக்கள் மீது தடவினால் அவை விரைவில் மறையும்.

துளசியிலை (5), மிளகு (3) இரண்டையும் தண்ணீரில் போட்டு கொதிக்க வைத்து அதில் தேன் கலந்து குடித்து வர சளித் தொல்லை நீங்கும்.

வைரஸ் தொற்றுக்களால் காய்ச்சால் ஏற்படும் போது, துளசி கைப்பிடியளவு, மிளவு (10), அறுகம்புல் கைப்பிடியளவு மூன்றையும் ஒரு மண்சட்டியில் போட்டு வெந்நீர் ஊற்றி சிறிது நேரம் மூடி வைக்கவும். பின் தண்ணீரை வடிகட்டி அதில் தேன் கலந்து குடித்தால் காய்ச்சல் குணமாகும்.

துள்சிச்சாற்றை ஒரு செம்புப்பாத்திரத்தில் இரவு முழுவதும் வைத்திருந்து அதிகாலையில் எலுமிச்சம்பழச்சாறு கலந்து குடித்து வந்தால் பித்தம் தொடர்பான நோய்கள் தீரும்.

துளச்சிச்சாறு, எலுமிச்சம்பழச்சாறு இரண்டையும் சேர்த்து சூடாக்கி அதில் தேன் கலந்து உணவிற்கு பின்பு குடித்து வந்தால் அதிகப்படியான எடை குறையும். எலுமிச்சம் துளசியானது நாட்டப்பட்ட இருமல், சிறுநீரக கற்கள், கர்ப்பப்பை கோளாறுகளுக்கு சிறந்த மூலிகையாகும்.

யாழ்.மாவட்டத்தில் எலுமிச்சம் துளசியானது கைவிடப்பட்ட தரிசு நிலங்களில் பரம்பிக் காணப்படும். சேதன மருத்துவப் பண்புகளைக் கொண்ட மூலிகையாகும்.

நாட்பட்ட இருமலுக்கு எலுமிச்சம் துளசி 1 பங்கிற்கு 4 பங்கு நீர் விட்டு 1/4 பங்காக குடிநீர் காய்ச்சி 60 மில்லி தினம் மூன்று வேளை சாப்பாட்டின் முன்பு எடுத்து வர வேண்டும். நாட்பட்ட இருமல் நீங்கும்.

எலுமிச்சம் துளசி, பெருஞ்சீரகம் இரண்டையும் சம அளவு எடுத்து உலர்த்தி பொடித்து 2 கிராம் அதை காலை, மாலை தொடர்ந்து சாப்பிட்டு வர சிறுநீரக கற்கள் கரையும்.

எலுமிச்சம் துளசி, இஞ்சி இரண்டையும் சம அளவு கலந்து 5 கிராம் அளவு தினம் 3 வேளை சாப்பிட்டு வர கர்ப்பப்பை கோளாறுகள் நீங்கும்.

எலுமிச்சம் துளசியிலைகளில் உயிர்ச்சத்து A, கல்சியம், மக்னீசிய சத்துக்கள் காணப்படுகின்றன. கண்பார்வைக்கும், தோலுக்கும் சிறந்த மூலிகையா கும். சமிபாட்டை துரிதப்படுத்தக்கூடியது.

பங்கஸ் தொற்றுக்களால் தோல் நோய்கள் ஏற்படும் போது எலுமிச்சம் துளசியிலைகளை எலுமிச்சம் பழச்சாறுவிட்டரைத்து பங்கசு தொற்றிற்கு பூசி வர அவைநீங்கும்.

உணவுக் கூறுகளை பழுதடையாமல் பாதுகாப்பதற்கு எலுமிச்சம் துளசியிலைகளை பயன்படுத்தலாம் (Food Preservative) எலுமிச்சம் துளசியை அரைத்து வீக்கம், கட்டி இவைகளுக்கு வைத்துக் கட்டினால் வீக்கத்தை கரைக்கும். அங்கு தங்கியுள்ள கெட்ட நீர்களை உறிஞ்சிக் கொள்ளும்.

துளசி


"மன்னனுக்குச் சீரளித்து மற்றவரைத் தாழ வைத்துப்
பின்னமிலாதுவைப் பேணியே- மன்னு நிலைப்
பேரணியப் பண்ணும் பிணிக்கு பிணியாகும்
தாரணியில் மாலவங்கல்"

துளசியானது வாத நோய்க் கூட்டங்களையும் கபக் குற்றத்தையும் குறைத்து அதனால் உண்டாகும் நோய்களையும் நீக்கி உடலைக் காக்கக் கூடியது.

துளசியின் வகைகள் யாழ்.மாவட்டத்தில் இயற்கையாகவே பரம்பிக் காணப்படுவது குறிப்பிடப்பட வேண்டிய விடயமாகும்.




# கீழடியில் உறை கிணறு கண்டுபிடிப்பு




(திருப்புவனம்)

கீழடியில் நேற்று புதிய குழி தோண்டும் பணியின் போது 2 உறைகள் கொண்ட கிணறு இருப்பது தெரியவந்துள்ளது.

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் அருகே மத்திய-மாநில அரசுகள் சார்பில் கீழடி, கொந்தகை, அகரம், மணலூர் ஆகிய 4 பகுதிகளில் 6ஆம் கட்ட அகழாய்வு நடைபெறுகிறது. இதில் பானைகள், செங்கல் கட்டட சுவர், விலங்கு எலும்புக்கூடு, எடைக் கற்கள், முதுமக்கள் தாழிகள், மனித மண்டை ஓடு, மனித முழு உருவ எலும்புக்கூடு, குழந்தைகள் முழு உருவ எலும்புக் கூடுகள், தங்க நாணயம், சங்கு வளையல்கள், சுடு மண் உலை, சிறிய, பெரிய எலும்புகள் உள்ளிட்ட பல பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டு உள்ளன. அகரத்தில் 13 அடுக்கு கொண்ட உறை கிணறு கண்டுபிடிக்கப்பட்டது. அகரம், மணலூர் ஆகிய இரு பகுதிகளும் மக்கள் வசிப்பிட பகுதிகளாக இருந்துள்ளது என தொல்லியல் அதிகாரிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

கீழடியில் தொழிற்சாலைகள் அதிகம் நிறைந்த பகுதி எனவும் கூறியுள்ளனர். இந்த நிலையில் கீழடியில் நேற்று புதிய குழி தோண்டி பணி நடந்தபோது முதலில் வட்டமாக ஒரு இடத்தில் தெரிந்தது. தொடர்ந்து அந்த இடத்தில் மண்ணை அகற்றிய போது 2 உறைகள் கொண்ட கிணறு இருப்பது தெரியவந்துள்ளது. தொடர்ந்து ஆழமாக தோண்டும்போது கூடுதலாக உறைகள் தென்பட வாய்ப்பு உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (2)

# 30 வருடங்களுக்கு முன்
## அகதியாய் வந்திறங்கிய அதே இடத்தில் இன்று அரசியல் பிரமுகராக தமிழனின் 'கட்அவுட்'




(சூரிச்)

யாழ்.மாவட்டம் கோண்டாவிலைப் பிறப்பிடமாகக்கொண்ட இவர் தனது 18 ஆவது வயதில் சுவிஸ் நாட்டில் அகதியாக தஞ்சம் புகுந்தார். இவர் கடந்த 7 வருடமாக பசுமைக் கட்சியில் அங்கம் வகித்து வருகிறார்.இரண்டு தடவை நகர சபை பாராளுமன்ற உறுப்பினராக அரசியல் பணிகளை முன்னெடுத்து வருகிறார்.

இம்முறையும் எதிர்வரும் 26ஆம்திகதி நடைபெறவுள்ள நகரசபை பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட களமிறக்கப்பட்டுள்ளார். செங்காளன் மாநில வைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தராக பணியாற்றி வருகின்ற ஜெயக்குமார் சிறந்த சமூக சேவையாளராவர் .

1989 இல் ஜனவரி மாதம் புகையிரத நிலையத்தில் "சொப்பின் பையுடன்" வந்து அகதியாய், அறியாத மொழி புரியாத சூழல் என்று திக்கு திசை தெரியாமல் தடுமாறி வீதியிலிருக்கும் தொலைபேசி கூண்டுக்குள் 4 நாட்களாக படுத்துறங்கியுமுள்ளார்.

இன்று அவர், அதே புகையிரத நிலையத்தில் பிரபல அரசியல் பிரமுகராக பிரமாண்ட "கட்அவுடில்"காட்சி அளிக்கின்றார் என்றால் அவர் கடந்து வந்த கடினமான பாதைகளையும் அதிஉச்ச வெற்றிகளையும் ஈழத்தமிழன் என்ற பெருமிதப்புடன் பெருந்தன்மையுடன் தமிழர்கள் அவரை வாழ்த்தியே ஆகவேண்டும். (2)

# செல்பி எடுக்க முயன்ற இளம் பெண் நீரினுள் மூழ்கி உயிரிழப்பு



(வோஷிங்டன்)

அமெரிக்காவில் உள்ள பால்ட் ரிவர் நீர்வீழ்ச்சியில் செல்பி எடுக்க முயன்ற ஆந்திராவை சேர்ந்த இளம் பெண் கால் தவறி நீருக்குள் விழுந்து மூழ்கி உயிரிழந்தார்.

ஆந்திரா மாநிலம் கிருஷ்ணா மாவட்டத்தை சேர்ந்தவர் கமலா. பொறியியல் பட்டதாரியான இவர் மேல்படிப்புக்காக அமெரிக்கா சென்று படித்து தற்போது அங்கு அவருக்கு வேலையும் கிடைத்தது. அவருக்கு திருமணமும் நிச்சயிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அடிலாண்டாவில் உள்ள உறவினர் வீட்டுக்கு தனது வருங்கால கணவருடன் சென்றுள்ளார். பின்னர் அங்கிருந்து அவர்களது வீட்டுக்கு திரும்பியுள்ளனர். அப்போது வழியில் இருந்த பால்ட் ரிவர் நீர்வீழ்ச்சியில் இருவரும் செல்பி எடுக்க முயன்றுள்ளனர். எதிர்பாராத விதமாக கால் சறுக்கி இருவருமே நீருக்குள் வீழ்ந்தனர். அதில் கமலா நீருக்குள் மூழ்கி இறந்த நிலையில் மீட்கப்பட்டார். அவரது வருங்கால கணவரை மீட்பு படையினர் காயங்களுடன் காப்பாற்றினர். (2)



அமெரிக்காவின் மேற்கு கடற்கரை முழுவதும் தொடர
பகுதிகளுக்கு காற்றின் தர எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
சுற்றுச்சூழல் திணைக்களம் இந்த எச்சரிக்கையினை விடுத்து
உள்ள கனேடியர்கள் வெளிப்புற செயற்பாடுகளை மட்டுப்படு
ஜன்னல்கள் மற்றும் கதவுகளை மூடி வைக்குமாறு கேட்டுக்

# உலகை விட்டு அகல ம

# புதிய தொற்றாளர்களின் எ

## உலக சுகாதார ஸ்

(ஜெனிவா)

**உலகளாவிய ரீதியில் ஒரேநாளில் பு**
**வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்**
**துள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெ**

நேற்று முன்தினம் மட்டும் 307,930 பேர் புதிய கொரோனா வைரஸ் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.


இதேவேளை 5,500 இற்கும் அதிகமான உயிரிழப்பு பதிவாகியுள்ளது. இது உலகளாவிய ரீதியில் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 9 இலட்சத்து 17 ஆயிரத்தை தாண்டியது.

இந்தியா, அமெரிக்கா மற்றும் பிரேசில் ஆகிய நாடுகளில் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை மிகப்



# வெளிநாடு





ாடர்ந்து பரவி வரும் காட்டுத்தீயினால், கனடாவின் சில ாது. புகை எல்லைக்கு வடக்கே நோக்கி நகர்வதால், கனேடிய ுத்துள்ளது. கடும் புகை நிலையை அனுபவிக்கும் பகுதிகளில் ுப்படுத்தவும் தண்ணீர் குடிக்கவும் வீடுகள் வாகனங்களின் ட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## சிரியா மீது இஸ்ரேல் தாக்குதல் கிளர்ச்சியாளர்கள் 10 பேர் பலி!

(டமாஸ்கஸ்)

சிரியா மீது இஸ்ரேல் விமானப்படை நடத்திய வான்வெளி தாக்குதலில் ஈரான் ஆதரவு கிளர்ச்சியாளர்கள் 10 பேர் உயிரிழந்தனர்.

சிரியா-இஸ்ரேல் எல்லைப் பகுதியில் ஈரான் நாட்டின் ஆதரவு பெற்ற சிரியா கிளர்ச்சியாளர்கள் பலர் பதுங்கியுள்ளனர்.

இவர்கள் சிரியாவில் இருந்தவாறு இஸ்ரேல் மீது ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்த கிளர்ச்சியாளர்களை அழிக்க இஸ்ரேல் விமானப் படைகள் தாக்குதல் நடத்துவதுண்டு.

இந்நிலையில், சிரியாவின் டியிர் இசோர் மாகாணத்தில் அல்பு கமல் பகுதியில் நேற்று இஸ்ரேல் நாட்டின் விமானப் படையினர் திடீர் வான்வெளி தாக்குதல் நடத்தினர்.

இந்த தாக்குதலில் சிரியாவில் செயற்பட்டுவந்த ஈரான் ஆதரவு கிளர்ச்சியாளர்கள் 10 பேர் உயிரிழந்தனர்.

உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் ஈராக் நாட்டை சேர்ந்தவர்கள் என்பது தெரியவந்துள்ளது. சிரியாவில் 2011 முதல் நடைபெற்று வரும் உள்நாட்டு சண்டையில் இது வரை 3 இலட்சத்து 80 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (2)

## மறுக்கும் கொரோனா

## எண்ணிக்கை அதிகரிப்பு

### ஸ்தாபனம் தகவல்

**புதிய கொரோனா ணிக்கை அதிகரித் தெரிவித்துள்ளது.**

பெரிய அதிகரிப்பு பதிவாகியுள்ளது.

உலகளவில் 28 மில்லியனுக்கும் அதிகமானோர் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அவற்றில் அதிகமானோர் பங்கினர் அமெரிக்காவில் உள்ளனர்.

கொரோனாவால் பாதிக்கப்பட்ட நாடுகளின் பட்டியலில் அமெரிக்காவிற்கு அடுத்ததாக இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது.

கடந்த வாரம் ஓகஸ்ட் மாதத்தில் கிட்டத்தட்ட இரண்டு மில்லியன் கொரோனா வைரஸ் தொற்றார்கள் பதிவாகியுள்ளனர். இது தொற்றுநோய் ஆரம்பித்ததிலிருந்து உலகின் மிக உயர்ந்த மாதாந்திர எண்ணிக்கையாகும். (2)

## அடுத்து வரும் மாதங்களில் ஐரோப்பாவில் கொரோனா மீண்டும் அதிகரிக்கும்

### உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை

(ஜெனிவா)

ஐரோப்பிய நாடுகளில் வரும் ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் கொரோனா வைரஸ் பாதிப்பு காரணமாக ஏற்படும் உயிரிழப்புகள் மீண்டும் அதிகரிக்கலாம் என உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

சீனாவில் ஹுபேய் மாகாணம் வுஹான் நகரில் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் கொரோனா வைரஸ் கண்டு பிடிக்கப்பட்டது. இந்த வைரஸ் தற்போது உலகின் 213 நாடுகளுக்கு பரவி பெரும் மனித பேரழிவை ஏற்படுத்தி வருகிறது.

உலக அளவில் கொரோனா வைரஸ் அதிகம் பரவியவர்களை கொண்ட நாடுகள் பட்டியலில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. இதற்கிடையில், கடந்த பெப்ரவரி, மார்ச் மாதங்களில் ஐரோப்பிய நாடுகளில் கொரோனா வேகமாக பரவி வந்தது. அந்த காலகட்டத்தில் இங்கிலாந்து, பிரான்ஸ், ஸ்பெயின் போன்ற நாடுகளில் தினமும் சராசரியாக 1,000 உயிரிழப்புகள் ஏற்பட்ட வண்ணம் இருந்தது.

ஆனால், கடந்த சில மாதங்களாக ஐரோப்பிய நாடுகளில் கொரோனா கட்டுக்குள் இருந்தது. உயிரிழப்புகளின் எண்ணிக்கையும், புதிதாக வைரஸ் பரப்புபவர்களின் எண்ணிக்கையும் மிகப்பெரிய அளவில் குறைந்திருந்தது. இதனால் அமுலில் இருந்த ஊரடங்கு தளர்த்தப்பட்டு இயல்பு நிலைக்கு திரும்பியது. இதற்கிடையில், ஐரோப்பிய நாடுகளில் கொரோனாவைரஸ்மீண்டும்வேகமெடுக்க தொடங்கியுள்ளது.

இதனால், ஐரோப்பிய நாடுகளில் கொரோனாவின் இரண்டாவது அலை தாக்கம் ஏற்பட அதிக வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் ஐரோப்பாவில் கொரோனாவால் ஏற்படும் உயிரிழப்புகள் மீண்டும் அதிகரிக்கலாம் என உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது. (2)

**டுபாய் சிலிகன் ஓயசிஸ் ஆணையம் பொது இடங்களில் உலா வரும் மக்களின் உடல் வெப்பநிலையை பரிசோதனை செய்ய 'கேசி என்901' என்ற நவீன தெர்மல் 'ஸ்கானிங் ஹெல்மெட்'டை பாதுகாப்பு ஊழியர்களுக்கு வழங்கி உள்ளது. இந்த ஹெல்மெட்டின் உதவியால் டுபாய் சிலிகன் ஓயசிஸ் பகுதியில் நடமாடும் பொதுமக்களின் உடல் வெப்பநிலையை தொலைவில் இருந்தே அறிந்து கொள்ளலாம்.**

**பொதுவாக மனிதனின் சாதாரண உடல் வெப்பநிலை 36.5 டிகிரி செல்சியஸ் ஆகும். இதில் 37.5 டிகிரி செல்சியஸ் வரை சாதாரண வெப்பநிலையாக கருதப்படும். உடல் வெப்பநிலை 38 அல்லது அதற்கு மேல் அதிகரித்தால் அது காய்ச்சலாக கருதப்படும். அந்த ஹெல்மெட்டின் திரையில் மனித உடல் வெப்பநிலை 'இன்பெரா ரெட்' எனப்படும் அகச்சிவப்பு கதிர்கள் உதவியுடன் வெப்பநிலையானது பரிசோதனை செய்யப் படுகிறது. அவ்வாறு உடல் வெப்பநிலை அதிகமாக காணப் படும் நபர்கள் அடையாளம் காணப்பட்டு பாதுகாப்பு ஊழியர்களால் மருத்துவ பரிசோதனைக்கு அழைத்து செல்லப்படுவார்கள்.**

**இதற்காக தனியாக வெப்பநிலை பரிசோதனைக் கருவிகள் எதுவும் பயன்படுத்த வேண்டிய தேவையில்லை. காலதாமதம் ஏற்படுவது தவிர்க்கப்படும். பொதுமக்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு இந்த நவீன முறையிலான ஹெல்மெட் பயன்படுத்தப்படுகிறது.**

## ஜெருசலேமில் உள்ள மசூதியொன்றை இடிக்க இஸ்ரேல் உத்தரவு

(ஜெருசலேம்)

ஆக்கிரமிக்கப்பட்ட கிழக்கு ஜெருசலேமில் உள்ள ஒரு மசூதிக்கு கட்டுமான அனுமதி இல்லாத காரணத்தினால் அதை இடிப்பதற்கான உத்தரவினை இஸ்ரேலிய நீதிமன்றம் பிறப்பித்துள்ளதாக பாலஸ்தீனிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இஸ்ரேலின் இடிப்பு அறிவிப்புக்கு பதிலளிக்கும் விதமாக, காசாவில் உள்ள மானியம் மற்றும் மத விவகார அமைச்சகம் பாலஸ்தீனிய ஊடகங்களால் பரப்பப்பட்ட ஒரு அறிக்கையை வெளியிட்டதுடன் இந்த நடவடிக்கைக்கு எதிராக இஸ்ரேலையும் எச்சரித்துள்ளது.

அது மாத்திரமின்றி ஜெருசலேமில் உள்ள முஸ்லிம் புனித தலங்கள் மற்றும் வழிபாட்டுத் தலங்களை பாதுகாக்க சர்வதேச சமூகம், அரபு லீக்



மற்றும் இஸ்லாமிய மாநாட்டின் அமைப்பு ஆகியவற்றுக்கும் பாலஸ்தீன் அழைப்பு விடுத்துள்ளது.

சில்வான் நகரில் உள்ள ககா பின் அம்ர் மசூதி உள்ள பகுதியில் உத்தரவை செய்ய இஸ்ரேலிய அதிகாரிகள் குடியிருப்பாளர்களுக்கு 21 நாட்கள் அவகாசம் அளித்தனர்.

இல்லையெனில் இந்த உத்தரவு மேற்கொள்ளப்படும் என்று ஊடக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இதேபோன்ற இடிப்பு உத்தரவு 2015 இலும் வெளியிடப்பட்டது. ஆனால் அது செயல்படுத்தப்படவில்லை. 2012 இல் நிர்மாணிக்கப்பட்ட இந்த இரண்டு மாடி மசூதியில் நூற்றுக்கணக்கான வழிபாட்டாளர்கள் தங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (2)


# வெளிநாட்டிலிருந்து வருவோரால் கொரோனா பரவும் வாய்ப்பு

## அவதானமாக இருக்குமாறு விசேட வைத்தியர் எச்சரிக்கை

**(கொழும்பு)**

**வெளிநாடுகளில் இருந்து வரும் நபர்களால் நாட்டிற்குள் கொரோனா பரவாமல் இருப்பது தொடர்பில் அவதானமாக இருக்குமாறு விசேட வைத்தியர் சுதத் சமரவீர எச்சரித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது எச்சரித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,



வெளிநாடுகளில் இருந்து வரும் பலர் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியிருப்பதாகவும் இதுவரையில் சமூகத்தினுள் கொரோனா தொற்று இல்லாவிடினும் அது பரவுவதற்கான வாய்ப்பு. அதாவது, சில வேளை எம்மால் இனங்காணப்படாத ஒரு கொரோனாத் தொற்றாளர் சமூகத்தில் இருந்தால் அதனூடாக கொரோனா பரவும் வாய்ப்பு இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஜ-4)

# இரு பேருந்துகள் மோதல் 11 பேர் படுகாயமடைந்தனர்



(கொழும்பு)

நோர்வூட் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 11 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இச்சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றது. இது தொடர்பில் தெரிய வருவதாவது,

ஹற்றனிலிருந்து பொகவந்தலாவை நோக்கிச் சென்ற அரச பேருந்தும் பொகவந்தலாவையிலிருந்து ஹற்றன் நோக்கி வந்த சிறியரக பேருந்தும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது.

இதில் இரு பேருந்துகளிலும் பயணித்தவர்களில் 11 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். (ஜ-4)

# மங்களவிடம் பொலிஸார் விசாரணை



(கொழும்பு)

இலங்கை சிங்கள பௌத்த நாடில்லை என தெரிவித்தமை குறித்து முன்னாள் நிதியமைச்சர் மங்கள சமரவீரவை பொலிஸார் விசாரணைக்குட்படுத்தியுள்ளனர்.

மாத்தறையில் சுமார் இரண்டு மணிநேரம் மங்கள சமரவீரவை அவரது கருத்துக் குறித்து பொலிஸார் விசாரணைக்குட்படுத்தியுள்ளனர்.

மங்கள சமரவீர வாக்கு மூலம் வழங்குவதற்காக சென்ற வேளை அவருடன் ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசிய கட்சி ஆகியவற்றின் உறுப்பினர்கள் சிலரும் சென்றுள்ளனர்.

மாத்தறையில் மங்கள சமரவீர தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் இராஜாங்க அமைச்சர் செகான் சேமசிங்க செய்த முறைப்பாட்டின் அடிப்படையிலேயே பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஜ-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## எதிர்மறை மனோபாவம்!

“கல்யாணத்திற்குப் போயிருந்தாயே.. எப்படி இருந்தது? ” என்று கேட்டார் ஒருவர். “ எப்படி இருந்தது... ரசத்திலே உப்பு குறைவு” என்றார் அவர். இது ஒரு மனித சுபாவம்.

Negative விடயங்களை பார்க்கிறது- பேசுவதாலே தான் மனிதனுக்கு ஆர்வம் அதிகம். இரசத்திலே உப்பு குறைவு என்பது ஒரு குறைதான். ஆனால் சாம்பாரிலே அது சரியாக இருந்தது... காய்கறியிலே அது சரியாக இருந்தது...அதையெல்லாம் சொல்ல மனசு வரவில்லை பாருங்கள்.

ஒரு பெரிய வெள்ளைப் பேப்பர் நடுவிலே ஒரு சின்ன கறுப்புப் புள்ளியை வைத்து அதை ஒருத்தரிடம் நீட்டி அது என்ன என்று கேட்டால்–கறுப்புப் புள்ளி என்று தான் சொல்லுவார்.

ஒரு சின்ன கறுப்புப் புள்ளியைத் தான் அவர் கவனிக்கின்றார். புள்ளியைச் சுற்றி பேப்பர் பூராகவும் வெள்ளைப் பகுதியாக இருக்கும் அதைக் கவனிப்பதில்லை.

ஒரு கண்ணாடி முன்னால் போய் நிற்கிறோம். முகத்தைப் பார்க்கின்றோம். கொஞ்சம் யோசித்துப் பாருங்கள். முகத்திலே நமக்கு பிடிக்காத பகுதியைத் தான் முதலிலே கவனிப்போம். ஒரு பரு இருந்தால் அதைப் பார்ப்போம். ஒரு கரும்புள்ளி இருந்தால் அதைக் கவனிப்போம். ஒரு சின்ன காயம் இருந்தால் அதைக் கூர்ந்து பார்ப்போம். அதைச் சுற்றியிருக்கின்ற அழகான பகுதிகள் எல்லாம் அதற்கு பின்பு தான். ஒன்றும் வேண்டாம். காலையிலே ஒரு செய்தித்தாளை வாங்கி புரட்டுகின்றோம்.

எதிர்மறையான செய்திகளைத் தான் முதலிலே பார்ப்போம். ஆக்கபூர்வமான செய்திகள் அதற்கு பின்புதான். Negative விடயங்கள் தான் பத்திரிகை விற்பனைக்கு முக்கியம்.

ஒரு கும்பலிலே கலவரம். பேப்பரிலே செய்தி எப்படி வருகின்றது?

கலவரத்தில் 10 பேர் உயிரிழந்தார்கள் என்று தான் வரும். கலவரத்தில் 918 பேர் உயிரோடு திரும்பிப் போனார்கள் என்று வராது. எத்தனை பேர் செத்தார்கள் என்பது தான் பத்திரிகைக்கு முக்கியம்.

ஏன் என்றால் மனிதன் மனம் அதைத் தான் கவனிக்கின்றது. பாதகமான செய்திகளே பத்திரிகைகளிலே அதிகம் வருகின்றது. எதிர்மறையான விடயங்களுக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது.

இதனாலே என்ன ஆகின்றது தெரியுமா?

இந்த உலகத்திலே எங்கே பார்த்தாலும் கொலையும்–கொள்ளையும் விபத்தும்–உயிரிழப்பும் தான் நடந்து கொண்டிருக்கின்றது மாதிரி ஒரு பிரமை. உலகத்து மகிழ்ச்சிகளையெல்லாம் வாழ்வின் சந்தோசங்களையெல்லாம் நாம் மறந்துவிடுகின்றோம்.

இன்று விமான விபத்தில் 214 பேர் உயிரிழந்தார்கள் என்பது Negative விடயம். இன்று விமானம் மூலமாக 2 இலட்சம் பேர் சௌக்கியமாக சந்தோசமாக பயணம் செய்தார்கள் என்பது Positive விடயம்.

செத்தது தான் செய்தியாக வரும். சௌக்கியமாக போனவர்களைப் பற்றி வெளியே தெரியாது. வாழ்க்கையின் சாதகமான விடயங்களிலே கவனம் செலுத்தக் கற்றுக் கொள்ள வேண்டும். இந்த உலகத்திலே சந்தோசப்படுவதற்கு நிறைய விடயங்கள் இருக்கின்றது சேர்.

அதையெல்லாம் கவனித்துப் பார்க்கக் கற்றுக் கொள்ள வேண்டும்.

ஒருநாள் முழுவதும் நல்லபடியாக நடந்து கொண்டிருப்பீர்கள்... ஏதோ ஒரு நேரத்திலே வாழைப்பழத் தோலிலே வழுக்கி விழுந்ததைத் தான் பெரிதுபடுத்திக் கொண்டிருப்பீர்கள்.

நாள் பூராக நன்றாக நடந்தது பெரிதாக தெரியாது எங்கள் பலம் என்ன என்பதிலே அதிக கவனம் தேவை.

தோல்வி மனப்பான்மை– Negative Attitudes, தாழ்வு மனப்பான்மை-Negative self Image. எதிர்மறையாகவே நினைப்பது. பேசுவது இந்த குணத்தை மாற்றிக் கொள்ளாதவன் எந்தக் காலத்திலேயும் முன்னேற முடியாது. வெற்றிகரமான மனிதன் ஆக முடியாது. அதனாலே இந்த நிமிடத்திலே இருந்து Negative விடயங்களிலே இருந்து Positive விடயங்களிலே கவனத்தைச் செலுத்துங்கள். வெற்றி நிச்சயம். ஒரே விடயத்தைக் கூட சிலபேர் Positive ஆக எடுத்துக் கொள்வார்கள்.. சிலபேர்...Negative ஆக எடுத்துக் கொள்வார்கள்.

ஒரு சத்திரத்திலே இரண்டு சாமியார்கள் சந்தித்துக் கொண்டார்கள். அவர்கள் கதையை பேசிக்கொண்டார்கள். “எனக்கு சம்சாரம் இல்லை. அதனால் நான் சாமியாராக ஆகிவிட்டேன் ” என்றார் ஒருத்தர்.

“ எனக்கு சம்சாரம் இருக்கிறார். அதனால் நான் சாமியார் ஆகிவிட்டேன் ” என்றார் இன்னொருவர்.

# தீவிரவாதிகளுடன் எந்தவொரு தொடர்பும் இல்லை

## றிசாத் மீண்டும் எடுத்துரைப்பு



(கொழும்பு)

தீவிரவாதிகளுக்கும் தனக்கும் எந்தவொரு தொடர்பும் இல்லை என முன்னாள் அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல்கள் குறித்து ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்று முன்தினம் முன்னிலையானதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

சஹ்ரானை நான் என் வாழ்நாளில் கண்டதும் இல்லை. தொலைபேசியில் கதைத்ததும் இல்லை அன்றும் இதனையே கூறினேன் இன்றும் இதனையே கூறுகின்றேன்.

எந்தவொரு அடிப்படைக் குழுக்களுக்கும் நாம் உதவவில்லை. உதவி செய்யப் போவதும் இல்லை.

2009 ஆம் ஆண்டு அமைதியின் பின்னரே நாம் எமது பிரதேசங்களுக்கு சென்றோம். நாம் ஒருபோதும் ஆயுதங்கள் பக்கம் செல்லவில்லை. அதற்கு உதவி செய்யவும் இல்லை" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)

# ஜனநாயக விழுமியங்களைப் பாதுகாக்க நாங்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்

## சர்வதேச ஜனநாயக தினத்தை முன்னிட்டு பிரதமர் அறிக்கை

(கொழும்பு)

**எதிர்காலத்தில் சுதந்திரமான, நியாயமான தேர்தல்களை உரிய காலத்தில் நடத்தி மக்கள் எம்மீது கொண்ட ஜனநாயகத்தின் உன்னத விழுமியங்களை நிலை நிறுத்துவதற்கு ஒரு அரசாங்கமாக நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**



நேற்று சர்வதேச ஜனநாய தினத்தை முன்னிட்டு வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"சர்வதேச ஜனநாயக தினம் உலக ஜனநாயகத்தின் நிலையை மதிப்பாய்வு செய்வதற்கான ஒரு வாய்ப்பை வழங்குகிறது" ஜனநாயகத்தை பாதுகாத்த ஒரு நாட்டின் பிரதமர் என்ற வகையில் சர்வதேச ஜனநாயக தினத்தை முன்னிட்டு செய்தி வெளியிடுவதற்கு கிடைத்தமை தொடர்பில் நான் மகிழ்ச்சியடைகின்றேன் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஜனநாயகத்தை பலப்படுத்துவதற்கும் உறுதிப் படுத்துவதற்கும் உலக நாடுகளை ஊக்குவித்து 2007ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச்சபையால் ஆண்டுதோறும் செப்டெம்பர் 15 ஆம் திகதி சர்வதேச ஜனநாயக தினமாக பிரகடனப்படுத்தப்பட்டது.

தற்போதைய மக்கள் சமூகத்தினுள் அனைவரும் தங்கள் எது ஜனநாயக உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும் என எதிர்பார்க்கின்றனர்.

அவர்களது வாழ்க்கையில் சுதந்திரம் மற்றும் சந்தோஷத்தை அனுபவிக்கும் உரிமையை பாதுகாத்தல் ஜனநாயகத்தின் குறிக்கோளாக காணப்பட வேண்டும் என நாம் நம்புவோம்.

எமது நாட்டு மக்களின் வாழும் உரிமைக்காக ஜனநாயகத்தை பாதுகாப்பதற்கு ஜெனிவா மனித உரிமைகள் பேரவைக்கு சென்ற அந்தக் காலம் இந்த தருணத்திலும் எனது ஞாபகத்திற்கு வருகிறது.

பயங்கரவாதத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து நாட்டிற்கு சமாதானத்தை பெற்றுக் கொடுத்து. இலங்கையில் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துமாறு அன்று நாம் பிரார்த்தித்தோம்.

நாம் ஆட்சிக்கு வரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பிரதிநிதித்துவ ஜனநாயகத்திற்காக முன்னிற்க முடிந்ததில் ஒரு நாடு என்ற வகையில் நாம் பெருமைப்படலாம்.

தேர்தல்களை நடத்தாத அரசாங்கங்களுக்கு எதிராக ஒன்றிணைந்து நாட்டு மக்களுடன் ஜனநாயகத்தின் வெற்றிக்காக நாம் செயற்பட்டோம்.

எதிர்காலத்திலும் சுதந்திரமான, நியாயமான தேர்தல்களை உரிய காலத்தில் நடத்தி மக்கள் எம் மீது கொண்ட ஜனநாயகத்தின் உன்னத விழுமியங்களை நிலைநிறுத்துவதற்கு ஒரு அரசாங்கமாக நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்.

ஜனநாயகத்தை பாதுகாத்து சுதந்திரமான, இறையாண்மை கொண்ட அரசு என்ற வகையில் எதிர்காலத்தை நோக்கி முன்செல்வதற்கு சர்வதேச ஜனநாயக தினமான இன்று அனைத்து இலங்கையர்களுக்கும் அழைப்பு விடுக்கிறேன் என தெரிவித்துள்ளார். (ஜ-4)

# தமிழ் மக்கள் பிரதிநிதிகள் ஒன்றிணைய வேண்டும்

(கொழும்பு)

தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார். ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.




அவர் தெரிவிக்கையில், பாராளுமன்றத்தில் தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் அங்குமிங்கும் இருப்பதால் பலமடைவது சிங்களவர்கள் தான்.

தமிழர்களாகிய நாம் அதனால் பலவீனமாகத்தான் இருக்கின்றோம். தமிழ் மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். பின்னர் தமிழ் பேசும் மக்கள் ஒன்றிணைய வேண்டும்.

அப்போது தான் சிறுபான்மையினராகிய தமிழ் பேசும் மக்கள் பலத்துடன் அரசாங்கத்திற்கு சவால் விடுக்கும் அளவிற்கு மாறலாம் எனவும், நான் விமர்சனங்களால் தான் வளர்ந்தவன்.

என்னை தொடர்ச்சியாக விமர்சித்து வந்ததன் விளைவாக தான் பாராளுமன்ற உறுப்பினராக உருவாக்கியிருக்கின்றார்கள்.

அதுமட்டுமன்றி என்னை பாராளுமன்ற சபாநாயகர் குழுவிலும், கோப் குழுவிலும் ஒரு உறுப்பினராக அதுவும் ஒரே ஒரு தமிழனாகவும் என்னை தெரிவு செய்துள்ளார்கள். இதற்கும் என்னை விமர்சிக்கின்றார்கள்.

எனக்கு ஒரே ஒரு எண்ணம் மட்டும்தான் உள்ளது. மக்களுக்கு தேவையான சேவைகளை புரிய வேண்டும்.

அதற்காக நாங்கள் பல வேலைத் திட்டங்களை சர்வதேச சமூகத்துடன் இணைந்து செய்வதற்காக திட்டமிட்டுள்ளோம்.

நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்தாலும் கூட மக்களுக்கு தேவையான அனைத்து விடயங்களையும் மக்களுக்காக அரசாங்கத்துடன் பேசி செய்ய வேண்டும் என மேலும் தெரிவித்தார். (ஜ-4)



# புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஓர் உலகளாவிய ஆய்வு

68

கலாநிதி முருகர் குணசிங்கம்

அத்தோடு பயங்கரவாத இயக்கத்துடன் தொடர்புள்ளவர்கள் எனக் குற்றம் சாட்டப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டு இருந்த 28 தமிழ்க் கைதிகளை நப்போலி **(Napoli)** நீதிமன்றம் விடுதலை செய்தது.

அதனை எதிர்த்து இத்தாலிய அரசின் சட்டத்தரணி அதே மேல்முறையீட்டு மன்றத்திலேயே மேல் முறையீடு செய்து இருந்தார்.

அந்த மேன்முறையீட்டையும் நீதிமன்றம் இரத்துச் செய்து 28 தமிழ்க் கைதிகளும் பயங்கரவாதம் அமைப்பைச் சேர்ந்தவர்கள் அல்ல என்று தீர்ப்பு வழங்கியது.

உலகில் சுமார் 196 நாடுகள் இருக்கின்றன. அவற்றுள் சுமார் 30 நாடுகளே விடுதலைப் புலிகளைப் பயங்கரவாத அமைப்பு என்று தடை விதித்து இருக்கின்றன.

அவை இந்தியா, அமெரிக்கா, பிரித்தானியா மேலும் ஐரோப்பிய ஒன்றியத்தில் பங்கெடுக்கும் ஏனைய நாடுகள் ஆகும்.

ஏன் மேற்கூறப்பட்ட நாடுகள் மட்டும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அமைப்பைப் பயங்கரவாத அமைப்பு என்று தடை செய்தன? ஏனைய 166 உலக நாடுகளும் ஏன் தடை செய்யவில்லை என ஆராய்ந்தால் அதற்கான விடை இலகுவாகக் கிடைக்கக் கூடியதாக இருக்கும்.

சுருங்கக்கூறின் விடுதலைப் புலிகள் அமைப்பு தடை செய்யப்பட்ட நிகழ்வும் விடுதலைப் போராட்டத்தை ஒடுக்க 2009 ஆம் ஆண்டு மே மாதம் மேற்படி சம்பந்தப்பட்ட நாடுகள் இலங்கை அரசுக்கு ஆதரவு அளித்த நிகழ்வும் மனித நேயத்திற்கும் உலக நீதிக்கும் அடிக்கப்பட்ட ஒரு சாவு மணி என்பதனை எதிர்கால அரசியல் வரலாற்று மாணவர்கள் ஆய்வு செய்து சம்பந்தப்பட்ட நாடுகளையும் அரசுகளையும் சர்வதேச நீதிமன்றக் கூட்டில் ஏற்றாமல் விடமாட்டார்கள்.

இதுவரையில் கலந்துரையாடப்பட்ட விடயங்களின் பின்னணியில் புலம்பெயர் ஈழத்தமிழ் மக்களின் நாட்டுப்பற்றுக் குறித்தும் அவர்களின் அரசியல் நிலைப்பாடுகள் பற்றியும் சுருக்கமாகக் காண்போம்.

1977 இல் இருந்து இலங்கை அரசின் கொடூரமான இனவாதப் பிடியில் இருந்து விலகி புலம்பெயர்ந்து மேலைத்தேச நாடுகளுக்குச் சென்ற ஈழத்தமிழர்கள் வெப்பப் பிரதேச நாட்டில் இருந்து அதிகக் குளிர் கொட்டும் நாடுகளுக்குச் சென்று ஒரு புதிய அந்நியச் சூழலில் வாழ்வைத் தொடங்குவது என்பது எவ்வளவு கொடுமையான அனுபவம் என்பதனைச் சாதாரணமாகச் சிந்திக்கும் ஒருவரால் உணர முடியும்.

கொட்டும் குளிரிலும் வீசும் காற்றிலும் எந்த வேலையைச் செய்யவும் ஆயத்தமாகி ஒரு நாளைக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட தொழில்களைச் செய்து அதில் இருந்து வரும் பணத்தில் தமது குடும்பச் செலவு, பிள்ளைகளில் கல்வி, பராமரிப்புச் செலவுகள் போக எஞ்சியதில் தம்மால் முடிந்த அளவு பணத்தை தேசிய விடுதலைக்காகவும் தமது உறவுகளின் வாழ்வுக்காகவும் தொடர்ச்சியாக அள்ளி வழங்கியது ஒன்றே அவர்களின் தேசப்பற்றிற்கும் அத்தேசம் விடுதலை பெற்று சுதந்திரத் தமிழ் ஈழமாக மலர வேண்டும் என்ற நாட்டுப்பற்றுக்கும் மிகச் சிறந்த எடுத்துக்காட்டு ஆகும்.

1983 இல் இருந்து விடுதலைப் போராட்டத்தைத் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் தீவிரமாக முன்னெடுத்துச் சென்றபோது தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் மேற்கண்ட நாடுகளில் குறிப்பாக அவுஸ்திரேலியா, ஐரோப்பிய, வட அமெரிக்கா போன்ற நாடுகளில் விடுதலைப் புலிகள் அமைப்பினர் பல நிகழ்ச்சிகளையும் ஜனநாயக வழிப்போராட்டங்களையும் கூட்டங்களையும் கருத்தரங்குகளையும் மகாநாடுகளையும் 2009 ஆம் ஆண்டு மே வரை தொடர்ச்சியாக நடத்தி வந்தனர்.



குறிப்பாக 1990களின் பின்னர் நடைபெற்ற மாவீரர் நினைவு நாள் நிகழ்ச்சி, திலீபன், அன்னை பூபதி நினைவு நாள் போன்ற நிகழ்வுகளில் பல்லாயிரக்கணக்கான ஈழத்தமிழர்கள் கலந்து கொள்வது வழமையான ஒன்று ஆகும்.

மேலும் 2006 டிசெம்பர் 14 ஆம் திகதி லண்டன் அலெக்ஸாண்டிரா மாளிகையில் இடம்பெற்ற விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் இறுதிச் சடங்கில் பங்கேற்பதற்காக ஐரோப்பிய நாடுகள், கனடா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் இருந்து ஆயிரக்கணக்கான தமிழர்கள் சென்று தமது இறுதி மரியாதையைச் செலுத்தி உள்ளனர்.

மேற்படி நிகழ்வுகளில் குழந்தைகள், வயோதிபர்கள், இளைஞர்கள், பெண்கள், ஏனையோர் என்று அனைத்துத் தரப்பினரும் ஆயிரக்கணக்கில் பங்கெடுத்துக் கொண்டனர்.

மேற்படி நிகழ்வுகள் எல்லாமே ஈழத் தமிழர்களின் அசைக்க முடியாத தேசப்பற்றை உலகத்திற்கு வெளிப்படையாகக் காட்டி நின்றதோடு தமிழ்த் தேசியத்தின் சகல அடையாளங்களையும் தமிழர்களின் ஒருமைப்பாட்டையும் மன உறுதியையும் தமது தாய் நாட்டு உறவுகளுக்கும் விடுதலைப் போராளிகளுக்கும் சிங்கள தேசத்திற்கும் உலகத்திற்கும் பறைசாற்றி நின்றன.

மேற்கண்ட நாடுகளில் தமது சமய, கலை, பண்பாட்டு, மொழி விழுமியங்களைப் பாதுகாப்பதிலும் அவைகளை அழிய விடாது பேணி வளர்த்து தமது இளைய தலைமுறையினரிடம் கையளிப்பதிலும் எந்த அளவிற்குத் தங்களை அர்ப்பணித்துக் கொண்டார்கள் என்பதைப் பற்றி ஏற்கனவே கலந்துரையாடப்பட்டது.

அதன் மூலமும் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் அவர்கள் ஒரு தனித்துவமான இனமாகத் தம்மை அடையாளப்படுத்தியதோடு நாடு கடந்த தமிழ்த் தேசியத்திற்கான அடித்தளத்தைக் கட்டி எழுப்பி இருக்கின்றார்கள்.

விடுதலைப் புலிகள் ஈழத்தில் வலுவாக இருக்கும்போது மேற்கண்ட நிகழ்வுகள் ஈழ விடுதலைப் போராட்டத்திற்கும் ஈழத்தில் வாழும் தமிழருக்கும் பாரிய பலத்தையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தியது.

புலம்பெயர்ந்த நாடுகளில் வாழும் இளம் தலைமுறையினர் ஈழ விடுதலை தொடர்பான சக நிகழ்வுகளிலும் ஆர்வத்தோடு பங்கெடுத்து வந்துள்ளனர் என்பதும் தமிழ்த் தேசிய விடுதலைக்குக் கிடைத்த மாபெரும் பலமும் வெற்றியும் ஆகும்.

அத்தோடு பல இளம் தலைமுறையினர் ஈழத்திற்குச் சென்று அங்கு பல்வேறு வழிகளில் தமது துறை சார்ந்த பங்களிப்பையும் தொடர்ச்சியாக மேற்கொண்டு வந்துள்ளமை ஈழம் வாழ் தமிழருக்கும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் கிடைத்த ஒரு வரப்பிரசாதம் ஆகும்.

அவ்வாறு சென்றவர்களுள் சிலர் தம்மை ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து போராட்டத்தில் பங்கு எடுத்துக் கொண்டது.

விடுதலைப் புலிகளின் தலைமையை ஆச்சரியத்திலும் மகிழ்ச்சியிலும் ஆழ்த்தி இருக்கும்.

தேசப்பற்றிற்கு இது தவிர வேறு எதுவித ஆதாரமும் தேவை இல்லை என்ற முடிவுக்கு வருவதைத் தவிர வேறு என்ன கூற முடியும்?

அவ்வாறான இளம் தலைமுறையினர் 2009 ஆம் ஆண்டுகளின் பின்னும் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் தமது பாரிய பங்களிப்புகளை விடுதலைப் புலிகள் சார்ந்த இயக்கங்களுடன் தொடர்ந்து செய்து வருகின்றனர்.

ஆனால் அவர்கள் நாடு கடந்த அரசிலோ அல்லது உலகத் தமிழர் அமைப்பிலோ நம்பிக்கை அற்றவர்களாகவே காணப்படுகின்றனர்.

மேலும் அவர்கள் 2009 இன் தொடக்கத்தில் போர் உச்சக்கட்டத்தை அடைந்த காலத்தில் இருந்தே மேற்கு நாடுகளில் நடைமுறையில் இருக்கும் ஜனநாயக வழிமுறைகளில் நம்பிக்கை வைத்து ஈழ விடுதலைப் போராட்டத்தையும் தமிழ் மக்களையும் அழிவில் இருந்து காப்பாற்றுவதற்காகப் பலவகையான ஜனநாயகச் செயற்பாடுகளை மேற்கொண்டனர்.

அதன்மூலமும் ஈழத்தமிழர்களை அழிவில் இருந்து காப்பாற்ற முடியும் எனவும் திடமாக நம்பினர். ஆனால் மாறாக ஈழ விடுதலைப் போராட்டத்தையும் ஈழத்தமிழர்களையும் இலங்கை அரசு மேற்கண்ட நாடுகளின் உதவியுடனேயே அழித்து ஒழித்தது. அவர்களை ஜனநாயக விழுமியங்களிலும் மேற்குலக நாடுகளிலும் நம்பிக்கை இழக்க வைத்தது.

பெரும்பாலான இளம் தலைமுறையினர் மேற்குலக நாடுகளின் ஜனநாயகத்தில் நம்பிக்கை இழந்த நிலையில் போரிடுவதைத் தவிர வேறு வழி இல்லை என்ற முடிவுக்கும் வந்து இருக்கின்றார்கள் என்பதனையும் அறிய முடிகின்றது.

2009 ஆம் ஆண்டு மே மாதம் விடுதலைப் புலிகளும் ஈழ விடுதலைப் போராட்டமும் மேற்குறிப்பிட்ட நாடுகளில் உதவியுடன் இலங்கை அரசினால் நசுக்கப்பட்டு ஓர் இலட்சத்திற்கும் மேலானவர்கள் கொன்று குவிக்கப்பட்டபோது மேற்கண்ட நாடுகளில் உள்ள ஈழத்தமிழர்கள் பல்லாயிரக் கணக்கில் கிளர்ந்து எழுந்து நீதி கேட்டுப் பல்வேறு போராட்டங்களை நடத்தினர்.

ஈழ விடுதலைப் போராட்டம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது என இலங்கை அரசு 2009 மே 19 ஆம் திகதி அதிகாரபூர்வமாக அறிவித்ததில் இருந்து இன்று வரை ஈழத்தமிழர்கள் தமது பல்வேறு போராட்டங்களைத் தொடர்ச்சியாக நடத்தி வருகின்றனர்.

(தொடரும்)

# 20ஆவது திருத்தத்தின் நகல்வடிவில் மாற்றங்கள்; ஜனாதிபதியும் பிரதமரும் தீர்மானிப்பர்

## கம்மன்பில தெரிவிப்பு



(கொழும்பு)

உத்தேச 20ஆவது திருத்தத்தின் நகல்வடிவில் என்ன மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் தீர்மானிப்பார்கள் என 20 ஆவது திருத்தத்தின் நகல் வடிவம் குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழு உறுப்பினரான உதய கம்மன்பில தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நகல்வடிவம் குறித்த கரிசனைகளை ஜனாதிபதி பிரதமரிடம் தெரிவிக்கப்போவதாகவும் நகல்வடிவில் என்ன மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை ஜனாதிபதியும் பிரதமரும் தீர்மானிப்பார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை குறிப்பிட்ட குழுவில்இடம்பெற்றுள்ள அனைத்து உறுப்பினர்களும் அனைத்து விடயங்களையும் ஏற்றுக்கொள்ளவில்லை என தெரிவித்துள்ள அமைச்சர் விமல் வீரவன்ச அனைத்து பரிந்துரைகளும் அறிக்கை மூலம் சமர்ப்பிக்கப்படும் என்றும் தெரிவித்ததுடன் ஆளும் அமைப்பு தொடர்பான விடயங்களுக்கு தீர்வைக் காண்பதற்கு அனைத்து உறுப்பினர்களும் இணங்கியுள்ளனர். வெளிச்சக்திகள் ஆட்சி விவகாரங்களில் தலையிட அனுமதிக்கமுடியாது என்றும் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# அமைச்சக அதிகாரிகள் சுகாதார விதி மீறல்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

சுகாதார அமைச்சால் வழங்கப்பட்ட கொவிட்-19 வழிகாட்டுதல்களை மீறியதாக சில அமைச்சக அதிகாரிகள் மீது அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

பயணிகள் இலங்கைக்குள் நுழைய அனுமதி வழங்குவதன் மூலம் சில அமைச்சகங்களின் உயர் அதிகாரிகளால் சுகாதார அமைச்சின் வழிகாட்டுதல்களை மீறிய சம்பவங்கள் குறித்து அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுகாதார அமைச்சின் செயலாளருக்கு எழுதிய கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

போரா சமூகத்தின் தலைவர், இலங்கைக்கான ரஷ்ய தூதர் மாலைதீவு மற்றும் சீஷெல்ஸ் நோயாளிகள் நாட்டுக்கு வருகை தரும் போது கொரோனா சுகாதார வழிகாட்டுதல்களுக்கு அமைச்சு விலக்கு அளித்ததாக மருத்துவ அதிகாரிகள் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

இதேவேளை அமைச்சின் வழிகாட்டுதல்கள் மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட கட்டளைச் சட்டங்களை அவசியம் கடைப்பிடிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்துமாறும் மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுகாதார அமைச்சகத்திடம் கோரிக்கை விடுத்தது.

சுகாதார அமைச்சின் சரியான நேரத் தலையீடு இலங்கைக்குள் கொவிட்-19 தொற்றுநோயை உகந்த முறையில் கட்டுப்படுத்துவதை உறுதி செய்யும் என்றும் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஜ-4)

# திலீபனின் நினைவு தினத்திற்கு மீண்டும் மறுத்த பொலிஸார்

(நெளுக்குளம்)


வவுனியாவில் இன்று 16 ஆம் திகதி இடம்பெறவிருந்த தியாகி திலீபனின் நினைவு தினத்திற்கு எவ்விதத்திலும் அனுமதி வழங்க முடியாது என வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்ததாக வவுனியா நகரசபை உறுப்பினரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின்முக்கிய உறுப்பினரும் வவுனியா மாவட்ட தியாகி திலீபனின் நினைவுதின ஏற்பாட்டாளருமான பிரபாகரன் ஜானுஜன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், தியாகி திலீபனின் நினைவு தினத்தினை அனுஷ்டிப்பதற்கும் வவுனியாவில் இருந்து பேரணியாக நல்லூர் நோக்கி செல்லவும் ஏற்பாடுகள்மேற்கொள்ளப்பட்டிருந்தன.

எனினும் அதற்கு வவுனியா பொலிஸார் ஏற்கனவே அனுமதி மறுத்திருந்தனர். இந்நிலையில் நாம் குறித்த நிகழ்வை நடத்த மீண்டும் முயற்சிகளை மேற்கொண்டிருந்தபோது இன்று தனது அலுவலகத்திற்கு அழைத்திருந்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் குறித்த நிகழ்வுக்கு அனுமதி வழங்கமுடியாது எனவும் யாழ்.மாவட்டத்தில் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ள தடையுத்தரவினையும் எமக்கு உதாரணப்படுத்தி சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்நிலையில் பொலிஸார் அனுமதி மறுத்ததன் காரணத்தினால் நாம் குறித்த நிகழ்வை நடத்த முடியாதுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-5-299)

# ஒரு இனத்தை இலக்காகக் கொண்டு 20ஆவது திருத்தம் கொண்டு வரப்படவில்லை



(கொழும்பு)

அரசியலமைப்பின் 20 வது திருத்தத்தை நாட்டு மக்கள் எவரும் நீதிமன்றில் சவாலுக்குட்படுத்தலாம். ஒரு இனத்தை இலக்காகக் கொண்டு 20வது திருத்தம் கொண்டுவரப்படவில்லை.

பல்லின மக்களின் அரசியல் அபிலாசைகளையும் கருத்திற்கொண்டு புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும் என விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இலங்கை மன்ற கல்லூரியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அரசியலமைப்பின் 19ஆவது திருத்தம் நாட்டுக்காக உருவாக்கப்பட்டதல்ல, அரசாங்கத்தின் தேவைக்காக அவசர அவசரமாக இயற்றப்பட்டது.

இதன் பயனை மக்கள் பெற்றுக்கொள்ளவில்லை. முரண்பாடுகள் மாத்திரமே தோற்றம் பெற்றன. நாட்டுக்கு பொருந்தும் வகையில் அரசியலமைப்பு திருத்தம் செய்யப்பட்டு, புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும் என நாட்டு மக்களுக்கு வாக்குறுதி வழங்கினோம்.

வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றும் பொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு. இதன் காரணமாகவே அரசியலமைப்பின் 19வது திருத்தம் இரத்துச் செய்யப்பட்டு 20வது திருத்தம் கொண்டு வரப்பட்டது.

வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள சட்டமூல வரைபு தொடர்பில் மாறுபட்ட கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. 20வது திருத்தச் சட்ட வரைபை யார் தயாரித்தது என்பது தொடர்பில் ஆராய்வதற்கான அவசியம் ஏதும் கிடையாது.

நாட்டு மக்கள் எவரும் 20வது திருத்தத்துக்கு எதிரான நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யலாம் என அவர் தெரிவித்தார். (ஜ-4)

# வயல் நிலங்களை இனங்கண்டு அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படும்

## விவசாய அமைச்சு அறிவிப்பு



(கொழும்பு)

மீள் பயிர்ச்செய்கை மேற்கொள்ள முடியாததெனினும் வயல் நிலம் என அடையாளம் காணப்படும்இடங்களில்பொருத்தமான அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்வதற்காக அதன் உரிமையாளர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கான முறையான திட்டமொன்றை வகுக்குமாறு விவசாய அபிவிருத்தித் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சின் செயலாளர் சுமித பெரேரா தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலையில் மக்கள் எதிர்நோக்கும் அசௌகரியங்களை கருத்திற்கொண்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பணிப்புரையின் கீழ் இந்நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் அத்தகைய நிலங்களை அடையாளம் காணும் செயற்பாடுகள் பிரதேச மட்டத்தில் முன்னெடுக்கப்படவுள்ளதுடன் அவை நிறைவடைந்த பின்னர் முறையான திட்டமொன்று வகுக்கப்படும் என அவர் தெரிவித்தார். (ஜ-6)

# வாள்வெட்டில் மாணவன் உயிரிழப்பு; சந்தேகநபர்களுக்கு அடையாள அணிவகுப்பு

(ஏறாவூர்)

ஏறாவூர் பொலிஸ் பிரிவின் கொம்மாந்துறைப் பிரதேசத்தில் கடந்த 22.08.2020 அன்று இரவு இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் கொல்லப்பட்ட மாணவரது கொலைச் சம்பவத்தில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களின் அடையாள அணி வகுப்பு இன்று புதன்கிழமை இடம்பெறவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கொம்மாந்துறை விநாயகர் வீதியை அண்டியுள்ள வீடொன்றில் இடம்பெற்ற அந்தச் சம்பவத்தில் செங்கலடி சந்தை வீதியைச் சேர்ந்த ரமணன் திவிராஜ் (வயது 15) என்ற மாணவனே வெட்டிக் கொல்லப்பட்டிருந்தார்.

அந்தச் சம்பவம் தொடர்பாக மொத்தமாக 6 சந்தேகநபர்கள் தலைமறைவாகியிருந்த நிலையில் கைது செய்யப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# சுற்றுலா மையமாகும் ஒல்லாந்தர் கோட்டை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் உள்ள ஒல்லாந்தர் கோட்டையை சுற்றுலா மையமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளை அதிகாரிகள் எடுத்து வருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் பெரியளவிலான வேலைத் திட்டங்களில் தற்போது மாவட்டச் செயலகமாக இயங்கிவரும் ஒல்லாந்தர் கோட்டையை வரலாற்றுப் பிரசித்தி பெற்ற சுற்றுலாத் தளமாக மாற்றுவதற்கான புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஜ-4)

# றிசாத் - கிரியெல்ல ஜனாதிபதி ஆணைக்குழுவில்



(கொழும்பு)

பாரளுமன்ற உறுப்பினர்களான றிசாத் பதியுதீன் மற்றும் லக்ஸ்மன் கிரியெல்ல ஆகியோர் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக் குழுவில் முன்னிலையாகினர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில், பல்வேறு தரப்பினரால் முன்வைக்கப்பட்ட வாக்குமூலங்களின் அடிப்படையில் ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு விடுக்கப்பட்ட அழைப்பின் பிரகாரம் அவர்கள் இருவரும் முன்னிலையாகினர். (ஜ-6)

## நியூடயமண்ட் கப்பல் விவகாரம்

# நீர் மாதிரிகள் தொடர்பான அறிக்கை கையளிப்பு

(கொழும்பு)

தீப்பற்றிய நியூ டயமண்ட் கப்பலை அண்மித்த கடற் பிராந்தியத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட நீர் மாதிரிகள் தொடர்பான அறிக்கை நேற்றைய தினம் சட்டமா அதிபரிடம் கையளிக்கப்பட்டது.

குறித்த கப்பலில் இருந்த அனைத்து வகையான எரி பொருட்களினதும் மாதிரிகள், நேற்று கரைக்கு கொண்டு வரப்பட்டதாக கடல் மாசுறல் தடுப்பு அதிகார சபையின் பொது முகாமையாளர் கலாநிதி டர்னி பிரதீப் குமார தெரிவித்தார்.

மேலும், இலங்கை கடற்படையின் விசேட குழுவினால் கப்பல் காணப்பட்ட ஆழ்கடலில் எரிபொருள் கசிவு உள்ளதா? என்பது தொடர்பில் ஆராயப்பட்டு அவ்வாறானதொரு எரிபொருள் கசிவுகள் ஏதும் ஏற்படவில்லையென கடற்படையின் ஊடகப் பேச்சாளர் கப்டன் இந்திக டி சில்வா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# முதலையை இறைச்சிக்காக வெட்டிய சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கைது

(கொழும்பு)

திருகோணமலை-கோமரங்கடவல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் முதலை ஒன்றினை இறைச்சிக்காக வெட்டிய சந்தேகத்தின் பேரில் ஏழு சிவில் பாதுகாப்புப் படை உத்தியோகத்தர்களை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் பகவடம் பகுதியைச் சேர்ந்த 32, 34, 38 வயது உடையவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் நேற்றையதினம் திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். (ஜ-4)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2117

Search for people, places and things

### தபோதரன்




இழந்தவை என்பது பலருக்கு வார்த்தை சிலருக்கு வாழ்க்கை

### செல்வா



பொன் நகை தேவையில்லை புன்னகை போதும் அழகு தேவதைகளுக்கு

### கொங்காதரன்




இழந்தவர்களுக்கே தெரியும் இழப்பின் வலி

### கனிமொழி



அடுத்தவர்களுக்கு புத்திமதி சொல்ல முன் வருபவர்கள் ஒருமுறை கண்ணாடியைப் பார்த்து விட்டு வரட்டும்

### தமிழினி



அகத்தின் வாயில் அடைக்கப்பட்ட மனிதர்களிடமிருந்து முகத்திற்கு வழங்கப்படும் மரியாதைகள் என்றும் சாபக்கேடுகளே


### சோபா



சாதாரண மனிதர்கள் சரித்திர மனிதர்களாக மாறும் வரை போராடிக் கொண்டேயிருக்க வேண்டும்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# விடுதலைப் புலிகளின் ரி-56 ரக துப்பாக்கி அதிரடிப்படையால் மீட்பு



(மருதமுனை)

மருதமுனை- துறைநீலா வணை இணையும் களப்பு பகுதியிலுள்ள மதகு ஒன்றின் அருகில், மறைத்து வைக்கப் பட்டிருந்த ரி-56 ரக துப்பாக்கி விசேட அதிரடிப்படையினரால் மீட்கப்பட்டது.

அம்பாறை மாவட்டம் கல்முனை விசேட அதிரடிப்படையின் புலனாய்வு பிரிவினருக்கு. பொதுமக்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றிற்கமைய நேற்று முன்தினம் திங்கட்கிழமை இந்தத் துப்பாக்கி மீட்கப்பட்டுள்ளது.

யுத்த காலங்களில் பாதுகாப்புத் தரப்பினரை இலக்கு வைத்து தாக்குவதற்கு விடுதலைப்புலிகள் அக்காலத்தில் பதுக்கி வைத்திருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளதுடன், மீட்கப்பட்ட துப்பாக்கி துருப்பிடித்து மீள இயக்க முடியாமல் காணப்படுகிறது.

மருதமுனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி எம்.எச்.அமில மதுரங்க வழிகாட்டலில் தற்போது மீட்கப்பட்ட துப்பாக்கி, விசேட அதிரடிப் படையினரின் முகாமில் பாரப்படுத்தப்பட்டுள்ளது. (ஜ-4)



# ஆன்மீகம்

## மனம் வெளுக்க வழியா இல்லை?

(நேற்றைய தொடர்ச்சி)

அனுபவம் வாய்ந்த ஆன்றோர்களின் நட்பும், அறிஞர்களின் நூல்களைப் படிப்பதும்தான் மனத்திற்கான உணவு. சிந்தனைகளை அலைபாயவிடாமல் ஒரிடத்தில் அமர்ந்து பரம்பொருளை, தன் குருநாதரை தியானிப்பதே ஒய்வு. இப்படி மனதை ஏற்ற வண்ணம் பாதுகாத்தால் மனம் தெளிவடையும். ஆவேசத்திலும், ஆணவத்திலும் பின்வரும் விளைவுகளை எண்ணிப் பார்த்து தவறான முடிவுக்கு வராமல் நின்று நிதானித்து செயற்படும். புத்தர் தன் சீடர்களிடம் 'தாகமாக இருக்கிறது. தண்ணீர் வேண்டும். பக்கத்தில் இருக்கும் நீரோடையிலிருந்து குடிப்பதற்கு ஒரு குவளையில் நீர் எடுத்து வாருங்கள்' என்றார்.

உடனே ஒரு சீடர் புறப்பட்டார். சற்று நேரத்தில் வெற்றுக் குவளையுடன் திரும்பி வந்தார். 'பல பேர் குதித்து, கும்மாளமிட்டு குளித்து தற்போதுதான் ஓடையைவிட்டுச் சென்று கொண்டிருக்கிறார்கள். எனவே, தண்ணீர் கலங்கியிருக்கிறது' என்றார்.

சற்று நேரம் கழித்து 'மீண்டும் சென்று நீர் எடுத்து வா!' என்று அதே சீடரை மீண்டும் அனுப்பினார் புத்தர். இப்படி நான்கைந்து முறை சென்ற பின்புதான் தெளிந்த நீரை அவரால் எடுத்து வர முடிந்தது. புத்தர் சொன்னார்... இப்படி சில அசாம்பாவித சம்பவங்கள் நடக்கும்போது நம் மனமும் மூளையும் கலங்கி விடுகிறது. தெளிவடைய சற்றுக் காலஅவகாசம் கட்டாயம் வேண்டும்.

ஒரு சிலர் உங்களின் நடை, உடை, பாவனைகளை உங்கள் முன்னிலையிலேயே கிண்டலடித்தும் கேலி செய்தும் விமர்சித்தால் உங்களுக்குக் கோபம் பொங்கிவரும். சண்டையிட்டு சச்சரவு செய்வீர்கள். அந்த இடம் ஒரு போர்க்களம் ஆகிவிடும் அல்லவா? ஆனால், அவர்களுக்குத் தக்க பதிலடியும் தர வேண்டும்.

அவர்கள் தங்கள் தவறை உணர வேண்டும். 'மன்னியுங்கள்' என்று சொல்லி உங்களிடம் மண்டியிட வேண்டும். அதேசமயம் அவர்களிடம் கோபமாக கொந்தளித்து எந்த வன்முறையிலும் ஈடுபடக்கூடாது என்றால் உங்களால் முடியுமா? 'தெளிவான மனம் இருந்தால் கட்டாயம் முடியும் என்பதை வீரத்துறவி விவேகானந்தரின் வாழ்க்கைச் சம்பவம் விபரிக்கின்றது. சுவாமி விவேகானந்தர் ஒரு நாள் ரயில் பயணம் மேற்கொண்டிருந்தார். அவரின் இருக்கைக்கு எதிராக இரு ஆங்கிலேயர்கள் அமர்ந்திருந்தனர். அவர்கள் இருவரும் அவரின் காவி உடையையும், மழித்த தலை மீது முண்டாசு கட்டியிருந்ததையும் பற்றி நையாண்டி செய்தனர்.

நாம் இருவரும் ஆங்கிலத்தில் உரையாடுவதை அவர் எப்படி புரிந்து கொள்வார் என்ற போக்கில் அவர்களின் ஏளனப் பேச்சு தொடர்ந்தது. ரயில் ஒரு நிலையத்தில் நின்றது.

ரயில்வே அதிகாரி ஒருவர் அதில் ஏறினார். அவரிடம் விவேகானந்தர் அருமையான மொழி நடையில் அற்புதமாக ஆங்கிலத்தில் பேசினார். அதிர்ச்சியிலும் அச்சத்திலும் ஆங்கிலேயர் இருவரது முகங்களும் வெளிறிப்போயின. தங்கள் இருவரையும் பற்றி அந்த ரயில்வே அதிகாரியிடம் ஏதாவது புகார் தெரிவிப்பார் இந்தத் துறவி என எண்ணினார்கள் அவர்கள்.

ஆனால், விவேகானந்தரோ அவர்களின் நையாண்டிப் பேச்சைப் பற்றி எதுவுமே எவரிடமும் குறிப்பிடவில்லை. மிகுந்த பயபக்தியுடன் 'ஆங்கிலம் தெரிந்திருந்தும் எங்களை நீங்கள் கோபிக்கவே இல்லையே?' என்றனர் இருவரும். புன்னகை புரிந்தபடி அவர்களுக்கு விவேகானந்தர் எப்படி புத்தி புகட்டினார் தெரியுமா? 'முட்டாள்களைப் பார்ப்பது இது ஒன்றும் எனக்கு முதல் முறை இல்லையே' என்று பதிலளித்து! இருவரும் வெட்கித் தலை குனிந்தனர். விவேகானந்தரின் பதிலடி மனம் வெளுக்காத மனிதர்கள் அனைவருக்கும்தான் என்பதை அறிந்து கொள்வோம்.

# செய்தித்துளிகள்

## கிராமத்திற்குள் நுழையும் நரிகள் மக்கள் கடும் அச்சத்தில்

### இதுவரை இருவர் மரணம்

(கொழும்பு)

களுத்துறை மில்லனிய கிராமத்திற்குள் நரிகள் புகுந்து அச்சுறுத்துவதால் அப்பகுதி மக்கள் கடும் அச்சத்தில் வாழ்க்கை நடத்துகின்றனர். இவ்வாறு கிராமத்திற்குள் நுழையும் நரிகளால் கடந்த ஒரு மாத்திற்குள் இரு மரணங்கள் பதிவாகியுள்ளன என்பது தெரியவந்துள்ளது. (ஜ-4)

## தேங்காய் விலை அதிகரிக்கும்

(கொழும்பு)

சமகாலத்தில் சந்தையில் தேங்காயின் விலை பாரியளவில் அதிகரித்துள்ளது.

அதிகரித்துள்ள தேங்காய் விலை நவம்பர் மாதம் 100 ரூபாய் வரையில் மேலும் அதிகரிக்கக் கூடும் என தெங்கு உற்பத்தியாளர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதுவரையில் சந்தையில் தேங்காய் ஒன்று 70 - 85 ரூபாய் விலையில் விற்பனை செய்யப்படுகின்றது.

தெங்கு செய்கை மூலம் மாதாந்தம் 250 மில்லியன் தேங்காய்கள் கிடைக்கின்ற போதிலும், அதில் 150 மில்லியன் பயன்பாட்டிற்கு எடுப்பதாகவும் தெரியவந்துள்ளது. (ஜ-4)

## பண மோசடியில் ஈடுபட்ட போலி பெண் வைத்தியர் கைது

(கொழும்பு)

உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலங்கை அலுவலக்த்துடன் இணைக்கப்பட்ட வைத்தியராக தன்னை அடையாளம் காட்டி, பல்வேறு நபர்களிடம் பண மோசடியில் ஈடுபட்ட பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்திற்கு உதவிய குற்றச்சாட்டுக்காக குறித்த பெண்ணின் கணவரும் தெகிவளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் கைது செய்யப்பட்ட பெண் பிலியந்தலாவ பகுதியைச் சேர்ந்தவர் ஆவார். (ஜ-4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 140 | 130 | 120 | 130 |
| பச்சைமிளகாய் | 140 | 100 | 140 | 200 |
| தக்காளி | 200 | 200 | 200 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 90 | 110 | 80 |
| கோவா | 120 | 130 | 140 | 120 |
| கரட் | 80 | 120 | 180 | 200 |
| பூசணி | 140 | 120 | 120 | 140 |
| புடோல் | 80 | 70 | 80 | 100 |
| வாழைக்காய் | 100 | 130 | 100 | 120 |
| சின்னவெங்காயம் | 120 | 140 | 140 | 160 |
| பெரியவெங்காயம் | 160 | 150 | 150 | 160 |
| பாகற்காய் | 300 | 380 | 300 | 400 |
| வெண்டிக்காய் | 100 | 80 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 140 | 170 | 150 | 150 |
| பயற்றங்காய் | 200 | 200 | 180 | 150 |
| லீக்ஸ் | 80 | 90 | 90 | 100 |
| பீற்றூட் | 100 | 100 | 90 | 100 |
| கறிமிளகாய் | 350 | 340 | 280 | 320 |
| முருங்கைக்காய் | 350 | 300 | 280 | 150 |
| போஞ்சி | 300 | 300 | 300 | 320 |
| கத்தரிதம்புள்ள | 80 | 80 | -- | 80 |
| கீரை - 1 பிடி | 40 | 20 | 30 | 40 |
| தேசிக்காய் | 150 | 160 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 100 | 70 | 60-80 |
| இராசவள்ளி | -- | -- | -- | -- |
| வெங்காயப்பூ | 200 | 200 | 180 | 240 |
| முள்ளங்கி | 80 | 20 | 80 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 40 | 30 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 20 |
| ஈரப்பலா | 60 | 80 | 50 | 100 |




## எல்லாம் நன்மைக்கே



ஒரு நாட்டை அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். அந்நாட்டு அமைச்சர் எது நடந்தாலும் "எல்லாம் நன்மைக்கே" என்று சொல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தான்.

ஒரு நாள் இருவரும் பேசிக் கொண்டிருந்த பொழுது அரசன் மாம்பழம் ஒன்றைக் கத்தியால் அறுத்தான்.

தவறுதலாகக் கத்தி அவனின் சுண்டு விரலை அறுத்து விட்டது. இரத்தம் வெளியேறி வலி தாங்க முடியாமல் அரசன் துடித்தான்.

வழக்கம் போல் அமைச்சர், "அரசே எல்லாம் நன்மைக்கே" என்றான். இதைக் கேட்டுக் கோபமடைந்த அரசன், "நான் விரல் வெட்டுப்பட்டுத் துடிக்கிறேன்.

எல்லாம்நன்மைக்கே என்று சொல்கிறாய். காவலர்களே அமைச்சரைச் சிறையில் கொண்டு போய் அடையுங்கள்" என்று உத்தரவிட்டான்.

காவலர்களும் அமைச்சரை சிறையில் அடைத்தனர். அப்போதும் அமைச்சர், "எல்லாம் நன்மைக்கே!" என்றார். நாட்கள் பல கடந்தன.

வேட்டையாடுவதில் ஆர்வமுடைய அரசன் தனியாகக் காட்டிற்குச் சென்றான். அங்கே மலைவாசிகள் காளிக்குப் பலி கொடுப்பதற்காக ஒருவனைத் தேடிக் கொண்டிருந்தனர். அவர்களிடம் அரசன் சிக்கிக் கொண்டான்.

அங்கு வந்த கோவில் பூசாரி அரசனை முழுமையாகச் சோதித்தான். பின்பு, "காளிக்கு எந்தக் குறையுமில்லாதவனை மட்டுமே பலியிட முடியும்.

இவனோ சுண்டு விரல் பாதியாக உள்ளான். இவனை விட்டு விடுவோம்" என்றான். அரசன் அரண்மனைக்கு வந்ததும் உடனடியாக அமைச்சரை விடுவிக்க உத்தரவிட்டான்.

நடந்ததை எல்லாம் அமைச்சரிடம்சொன்ன அரசன், "சுண்டு விரல் வெட்டுப்பட்டதால் உயிர் பிழைத்தேன்.

அன்று எல்லாம் நன்மைக்கே என்று நீர் சொல்லியதன் உண்மையை அறிந்தேன் என்றான்.

அரசே என்னைச் நீங்கள் சிறையில் அடைத்ததும் நன்மைக்கே. எப்பொழுதும் உங்களைப் பிரியாமலிருக்கும் நான், என்னைச் சிறையிலடைக்காமல் இருந்திருந்தால் உங்களுடன் காட்டிற்கு வந்திருப்பேன்.

அந்த மலைவாசிகள் எந்தக் குறையும் இல்லாத என்னை அவர்கள் பலியிட்டிருப்பார்கள்.

நீங்கள் என்னைச் சிறையில் அடைத்ததால் நான் உயிர் பிழைத்தேன் என்றார் அமைச்சர்.

**நீதி: எது நடந்தாலும் நல்லதையே நினைத்துக் கொள்ளவேண்டும்.**

# ராஜராஜ சோழப்பேரரசின் வரலாறு

## கலாரசிகனின் கலைக்கோயில்


69

அதேபோலவே சோழர் காலத்தில் கலைகள் ஏற்றம் பெற்றன. ராஜராஜனுக்கு முந்தைய அரசர்கள் ஆடல், பாடல்களை அரண்மனை முற்றத்தில் நிகழச் செய்து கண்டு களித்தார்கள்.

ஆனால் ராஜராஜன் இதைக் கோயிலில் மக்கள் முன்பு நடத்திக் காட்ட விரும்பினார்.

ஆடல், இசை என்னும் இரு கலைகளைக்கொண்டு பெரிய கோயிலுக்கு மேலும் பெருமை சேர்த்தார்.

நானூற்று ஏழு ஆடல் மகளிர், ஏழு நட்டுவனார்கள், உடன் பாடுவோர் நான்கு பேர், கானம் பாடுவோர் நால்வர், வீணை வாசிப்போர் இருவர், மெராவியம் எனும் இசைக்கருவி இசைப்பார் இருவர், வங்கியம் இசைப்பார் மூவர், பாடவியம் எனும் இசைக்கருவியை இசைப்போர் நால்வர், உடுக்கை வாசிப்போர் இருவர், வேதம் ஓதுவோர் மூவர், தமிழ் பாடுவோர் நால்வர், கொட்டி மத்தளம் வாசிப்போர் இருவர்,



ராஜராஜன் திருவாயில்

முத்திரைச் சங்கு ஊதுவோர் மூவர், பக்க வாத்தியம் வாசிப்போர் ஐவர் எனப் பல இசைக் கலைஞர்கள் பணியாற்றி பெரிய கோயிலில் இசை மழையை உண்டு பண்ணியிருக்கிறார்கள்.

பெரிய கோயிலில் பணியமர்த்தப்பட்ட பாடகர்களில் பலவகை காந்தர்வர்கள், பாணர்கள், தமிழ் பாடியவர், ஆரியம் பாடியவர், கொட்டுப் பாட்டுப் பாடியவர், கானப் பாட இருந்தவர், பிடாரர்கள் ஆகியோர் நாள் தோறும் இசைவழியாக மக்களுக்குப் பக்திப் பரவசத்தை அளித்துக் கொண்டிருக்கிறார்கள்.

பாணர்கள் கோயில்களில் பாடகர்களாக இருந்ததுடன் கோயில் தேவரடியார்க்குப் பாடல் சொல்லித்தரும் பணியையும் மேற்கொண்டிருந்தார்கள்.

பெரிய கோயிலில் நான்கு பாணர்கள் இருந்தனர். இவர்களின் இந்தச் செயலுக்கு தலைக்கு ஒன்றரை வேலி நிலம் வாழ்வூதியம் வழங்கப் பட்டது.

தேவார திருமுறைகளை தேடித்தொகுத்து ஓதச்செய்வதற்கு 48 ஓதுவார்கள், மத்தளம் வாசிப்போர் நியமிக்கப் பட்டார்கள்.

திருமுறை விண்ணப்பம் பாடுவோர், உடுக்கை வாசிப்போர், மத்தளம் வாசிப்போர் ஆகியோர் இருந்ததற்கான குறிப்புகள் இருக்கின்றன.

தமிழ்ப் பாடல்களைப் பாட பட்டாலகன், அமுதன் காணி, வானராசி கூத்தன், சூற்றி என்னும் நால்வர் இருந்தனர்.

இப்பாடகர்கள் தமிழ்க் கூத்துக்களுக்குப் பாடியவர்கள். இவர்களுக்குத் தலைக்கு ஒன்றரை வேலி நிலம் ஊதியமாக அளிக்கப்பட்டிருந்தது.

கோயிலில் வடமொழிப் பாடல்களை விடவும் தமிழ்ப் பாடல்களுக்கே அதிக முக்கியத்துவம் தரப்பட்டது.

(தொடரும்)

மனம் தூய்மையாக இருந்தால் பத்து மனிதர்களது பலத்தைப் பெறுகிறோம்.
– கிருபானந்த வாரியார்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இதயத்தில் நிறைந்தவனை நினையாமல் இதயம் துடிக்குமோ!

எதிர்வரும் 26ஆம் திகதி தியாக தீபம் திலீபனின் 33ஆவது ஆண்டு நினைவு தினம்.

தியாக தீபம் திலீபனின் நினைவு தினத்தை அனுஷ்டிப்பதற்கு நீதிமன்றம் தடை விதித்துள்ளது.

இவை ஒருபுறமிருக்க, இலங்கைக்கு வந்த போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் தத்தம் சமயத்தை பரப்புவதை மிக வேகமாகச் செய்தனர்.

கூடவே வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த சைவலாயங்களை அடித்து நொருக்கினர். இதில் திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம் ஆய சிவாலயங்கள் முழுமையாக அழிக்கப்பட்டன.

இவை தவிர, சைவ அனுட்டானங்களைக் கடைப்பிடிப்பது, விரதம் இருப்பது என சைவ சமய வழிபாடுகளுக்குத் தடை விதித்தனர்.

இதனால் சைவ மக்கள் மிகுந்த வேதனை அடைந்தனர். எனினும் உருவ வழிபாடாக நடந்ததை சைவ மக்கள் இதய வழிபாடாக மாற்றினர்.

ஒவ்வொரு சைவ சமயியும் சிவனை தம் இதயத்தில் இருத்தினர்.

பஞ்சாட்சரம் எனும் ஐந்தொழுத்தை தம் நாவில் ஏற்றினர்.

இதயத்தில் வீற்றிருக்கும் இறைவனை நாவால் அர்ச்சித்தனர். விரதம் இருந்தனர். விரதம் அனுஷ்டிப்போர் வாழை இலையில் போசனம் உண்ணுதல் சைவப் பண்பாடாகையால், அதனின்றும் விலக முடியாதவர்கள் வாழை இலையில் உணவைப் பரிமாறிப் பின்னர் அந்த வாழையிலையை வீட்டின் கூரையில் மறைத்து வைத்தனர். வாழையிலையில் உணவு உண்டால் அது சைவ சமயத்தைப் பின்பற்றுவதாகக் கருதி அந்நியர்கள் சைவ மக்களைத் தண்டித்ததன் காரணமாக அப்படியொரு ஏற்பாட்டை சைவ சமயத்தவர்கள் செய்தனர்.

இந்த நிட்டூரம் பல நூற்றாண்டுகள் கடந்தனவாயினும் சைவ மக்கள் சிவனை தம் இதயத்தில் இருத்தி வழிபட்டதால் சைவ சமயத்தை அழிக்க முடியாமல் போயிற்று.

பல நூற்றாண்டுகளாக குடியேற்றவாதிகள் சைவ நிந்தனை செய்தனராயினும், இன்று அதன் முடிவு இலண்டன் மாநகர வீதியில் தேரோடுகிறது. முருகக் கடவுள் வீதி வலம் வருகிறார். பந்தியிருத்தி வாழை இலை வைத்து அன்னம் பரிமாறப்படுகிறது.

இதில் வேடிக்கை என்னவெனில், அன்று இலங்கையில் சைவத்தை அழிக்க நினைத்த பிரிட்டிஷார் இன்று சைவாலயங்களுக்குச் சென்று தாமும் வழிபடுகின்றனர்.

கூடவே பந்தியில் இருந்து வாழையிலையில் உணவு உண்ணுகிறார்கள். எப்படி என்று பார்த்தீர்களா?

அன்று சைவத்தை அழிக்க நினைத்தவர்கள் இன்று தங்கள் நாட்டில் சைவம் வளர்வது கண்டு மகிழ்கின்றார்கள். வாழையிலையில் உணவு உண்பதை பெருமையாகக் கருதுகிறார்கள்.

இதுபோலவே, இன்று தியாகி திலீபனின் நினைவுகூரலுக்குத் தடை விதிக்கப்பட்டாலும் என்றோ ஒரு நாள் சிங்கள மாணவர்களும் திலீபனின் தியாகத்தை பாடப்புத்தகத்தில் படிப்பர்.

ஏனெனில் திலீபனைத் தமிழ் மக்கள் தங்கள் இதயங்களில் குடியிருத்தியுள்ளனர்.

## வெடுக்குநாறி ஆலயத்தில் திருவிழா செய்ய
# தொல்பொருள் திணைக்களம் பொலிஸார் ஊடாக தடைவிதிப்பு

(குருமன்காடு)

வவுனியா வடக்கு, வெடுக்குநாறி ஆதி சிவன் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தை நடத்துவதற்கு தொல்பொருள் திணைக்களம் நெடுக்கேணி பொலிஸார் ஊடாக நேற்று தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

தமிழ் மக்களின் தொன்மை வரலாறு கொண்ட நெடுங்கேணி, வெடுக்குநாறி மலை ஆதி சிவன் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் இன்று ஆரம்பமாக இருந்தது. இந்நிலையில் நேற்று மாலை 4 மணிக்கு ஆலய நிர்வாகத்தினரை நெடுக்கேணி பொலிஸ் நிலையத்திற்கு வருமாறு பொலிஸாரால் உத்தரவு வழங்கப்பட்டிருந்தது.

அங்கு சென்ற ஆலய நிர்வாகத்தினரிடம் தொல்பொருள் திணைக்களம் வருடாந்த உற்சவம் நடத்த அனுமதி மறுத்து தமக்கு கடிதம் வழங்கியுள்ளதாக தெரிவித்த பொலிஸார், குறித்த ஆலய நிர்வாகத்தினருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகவும் இன்று நீதிமன்றம் வருமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொல்பொருள் திணைக்களத்தின் குறித்த செயற்பாடு ஆலய பக்தர்களிடையை கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. (ம-3,250)

## வாடகை வீட்டில் இருந்த
# பொருட்களை திருடிய பெண்ணுக்கு 14 நாட்கள் விளக்கமறியல்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி -கச்சாய் வீதி உதயசூரியன் பகுதியில் வாடகை வீட்டில் இருந்த பெண் ஒருவர் வீட்டில் இருந்த மூன்றரை இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்களையும் திருடிக் கொண்டு தலைமறைவாக இருந்த போது சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இரு மாத காலம் வாடகைக்கு இருந்த போதே இத் திருட்டு இடம்பெற்றுள்ளது. இதன் போது வீட்டில் காணப்பட்ட வீட்டு உரிமையாளரின் பொருட்களான குளிர்சாதனப் பெட்டி, கதவு, தளபாடங்கள் உள்ளிட்ட மூன்றரை இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்களை திருடி உள்ளார். இது தொடர்பாக வீட்டு உரிமையாளர் சாவகச்சேரி பொலிஸாரிடம் செய்த முறைப்பாட்டினை அடுத்து மட்டுவில் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவரும், அவருக்கு உதவிய நாவற்குழிப் பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் வீட்டில் இருந்து திருடப்பட்ட பொருட்களையும் மீட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். கைது செய்யப்பட்ட இருவரையும் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நீதிமன்றத்தில் முற்படுத்தி 14நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-3,30)

# 20ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவதற்கு அவசரமான எந்தக் காரணமும் இல்லை

## கரு ஜெயசூரிய சுட்டிக்காட்டு

(கொழும்பு)

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தை நிறைவேற்ற அவசரம் காண்பிப்பதற்கு எவ்வித நியாயமான காரணங்களும் இல்லை.

எனவே அதுகுறித்து ஆராய்வதற்காக பிரதமரால் நியமிக்கப்பட்ட மீளாய்வுக்குழு மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டும் என முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பின் 20ஆவது திருத்தம் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக பிரதமர் மகிந்த ராஜபக்ஷவால் மீளாய்வுக்குழு வொன்று நியமிக்கப்பட்டது.

தனது டுவிட்டர் பதிவொன்றின் மூலம் கரு ஜெயசூரிய இதனை வலியுறுத்தியுள்ளார்.

முன்மொழியப்பட்ட வெள்ளைக் காகிதமாக உள்ள அரசியலமைப்பின் 20ஆவது திருத்தம் தொடர்பில் ஆராய்வதற்காக பிரதமரினால் நியமிக்கப்பட்ட மீளாய்வுக் குழு மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டும்.

20ஆவது திருத்தத்தை நிறைவேற்றிக் கொள்ள அவசரப்படுவதற்கு எவ்வித நியாயமான காரணங்களும் இல்லை என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடொன்று சமத்துவம் மற்றும் சுபீட்சம் ஆகியவற்றை நோக்கிப் பயணப்படுவதை உறுதி செய்வதற்கு ஜனநாயகக் கட்டமைப்புக்கள் மிகவும் அவசியமானவையாகும் என்றும் கரு ஜெயசூரிய தனது பதிவில் வலியுறுத்தியுள்ளார். (ஜ-4)

## அம்பன் புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு
# இழப்பீடு வழங்க நடவடிக்கை
## விவசாய அமைச்சர்

(யாழ்ப்பாணம்)

அம்பன் புயல் காரணமாக பாதிக்கப்பட்ட வாழை, பப்பாசி செய்கையாளர்களுக்கு இழப்பீடு பெற்றுத் தரப்படுமென விவசாய அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே நேற்று உறுதியளித்தார்.

யாழ் மாவட்டச்செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் முன்பும் ஒரு அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தின் போது கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் இணைந்து அமைச்சரவையில் கலந்துரையாடி இழப்பீடு பெற்றுத் தரப்படும் என அவர் உறுதியளித்தார். (ஜ-4-8)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 17 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரை

**யாழ்.பிரதேசத்தில்** உடுப்பிட்டி, பொலிகண்டி, வல்லை, தொண்டைமானாறு, வல்வெட்டித்துறை, அக்கரை, வளலாய் ஆகிய இடங்களிலும்,

**வவுனியா பிரதேசத்தில்** நெளுக்குளத்திலிருந்து உளுக்குளம் வரை, வாரிக்குட்டியூர், நித்தியநகர் ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** கற்கிடந்தகுளம் ஆகிய பிரதேசத்திலும் மின்சாரம் தடைப்படும்.

## வாழ்வைப் பொன்னாக்கும் வைர வரிகள்

**உன்னை நீயே இரக்கமின்றி ஆய்ந்து பார். அப்போது நீ பிறரிடம் பரிவுடனும் இரக்கத்துடனும் நடந்து கொள்வாய். - ஸ்ரீஅரவிந்தர்**

## ஆன்மீகச் சிந்தனைகள்

### தற்புகழ்ச்சி வேண்டாமே

❖ தற்புகழ்ச்சி இல்லாத ஒருவனின் பெயரைக் கடவுள் மூவுலகிற்கும் தெரியப்படுத்தி மகிழ்ச்சியடைவார்.

❖ வயது முதிர்ந்த காலத்தில் பட இருக்கும் துன்பத்தைப் பற்றி சிந்திப்பவன், வாழ்வில் தடுமாறத் தேவையிருக்காது.

❖ நாம் இதுவரை முன்னேறாமல் இருப்பதற்கு, இதுவரை நல்லவர்களோடு பழகவில்லை என்பதே காரணம்.

❖ எதிரி மீது கோபம் கொள்ள வேண்டாம். வேண்டாதவரும் வாழ வேண்டும் என நினைப்பது தான் நம் பண்பாடு.

❖ படிப்பினால் வரும் அறிவை விட, அனுபவத்தால் கிடைக்கும் அறிவு மேலானது.

# கே.சி.சி.சி.வெற்றி கிண்ணம் - 2020

# விக்டோறியன்ஸ் அணி 2வது சுற்றுக்கு தகுதி



கே.சி.சி.சி. வெற்றிக்கிண்ணம் - 2020 தொடருக்கான முதலாவது சுற்றின் முதலாவது போட்டி கடந்த சனிக்கிழமை 12ஆம் திகதி காலை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

போட்டியில் விக்டோறியன்ஸ் அணி ஸ்கந்தாஸ்ரார்ஸ் அணியை 4 ஓட்டங்களால் வெற்றிபெற்று 2 ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய விக்டோறியன்ஸ் அணி 29 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 208 ஓட்டங்களைப் பெற்றது. போட்டியில் கிரிஷாந் 17, பிரசாந் 38, பிரதீஸ் 27, நஞ்சன் 20, செந்துரான் 11, கிரிஷாந் 23, ஓட்டங்களை பெற்றனர். களத்தடுப்பில் ஸ்கந்தாஸ்ரார்ஸ் அணியின் புருசோத்மன் 2, றெக்சன் 2, கனுயன் 3 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தாஸ்ரார்ஸ் அணி 30 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 204 ஓட்டங்களை பெற்றது. போட்டியில் சதீஸ் 26, அஜந்தன் 18, நிரோஸன் 28, பிரசன் 25, சண்சயன் 41, புருசோத்மன் 19 ஓட்டங்களை பெற்றனர். களத்தடுப்பில் விக்டோறியன்ஸ் அணியின் கஜேந்திரன் பிரதீஸ் 2, பிரசாந் விஜயகுமார் பிரியங்கன் ஒரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இப்போட்டியில் வெற்றி பெற்ற விக்டோறியன்ஸ் அணி எதிர்வரும் 19ஆம் திகதி விக்டோறியா கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள 2ஆவது சுற்றில் 9ஆவது போட்டியில் ரி.சி.சி.அணியை எதிர்கொள்ள வுள்ளமை குறிப்பிடத்தக்கது.(4)

## சம்பியனானது

# புத்தூர் கலைமதி இளைஞர் கழகம்



கோப்பாய் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான ஆண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டிகள் கடந்த சனிக்கிழமை 12ஆம் திகதி புத்தூர் கலைமதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் பலம் வாய்ந்த அணிகளான புத்தூர் கலைமதி இளைஞர் கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் மேற்கு இளைஞர் கழக அணி மோதியது.

இரு அணிகளும் சமபலம் பொருந்திய அணிகளாக காணப்பட்டதால் ஆட்டத்தில் அனல் பறந்தது.

மிகவும் பரபரப்பாக நடைபெற்ற போட்டியில் 03:02 என்ற கணக்கில் ஆவரங்கால் மேற்கு இளைஞர் கழக அணியை வீழ்த்தி 2020 ஆம் ஆண்டுக்கான சம்பியனானது புத்தூர் கலைமதி இளைஞர் கழக அணி. (4)

# தாச்சி விளையாட்டு சுற்றுப் போட்டிகள்

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டு சங்கத்தினால் நடத்தப்படும் 2020ஆம் ஆண்டுக்கான தாச்சி சுற்றுப் போட்டி எதிர்வரும் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணி தொடக்கம் இரவு 9 மணி வரை நடைபெறவுள்ளதென யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டு சங்க செயலாளர் வை.ஆனந்தஜெஸ்கரன் அறிவித்துள்ளார். (4)



**யாழ்.உதைபந்தாட்ட லீக் நடத்தும் 25 வயதிற்குட்பட்டவர்களுக்கான 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டியில் நேற்றைய தினம் பாடும்மீன் அணியை எதிர்த்து புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக்கழக அணி மோதியது. இப்போட்டியில் பாடும்மீன் அணி 9-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தகுதிபெற்றது. (படம்: குருநகர் செய்தியாளர்)**

# பங்களாதேஷ் கிரிக்கெட் சபை எழுப்பிய ஆட்சேபனையை மீள ஆராயவும்

## - நாமல் -

இலங்கைக்கு எதிராக ஆரம்பமாகவுள்ள டெஸ்ட் தொடர் குறித்து பங்களாதேஷ் கிரிக்கெட் வாரியம் (பி.சி.பி) எழுப்பியுள்ள ஆட்சேபனை குறித்து ஆராயுமாறு இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்துக்கு விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

ஜூலை மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் திட்டமிடப்பட்டிருந்த இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான டெஸ்ட் தொடரானது கொவிட்-19 தொற்று நோயால் ஒத்திவைக்கப்பட்டது.

அதன்படி மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டியை ஒக்டோபர் 24 ஆம் திகதி ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

அதனால் இப்போட்டியில் விளையாடுவதற்காக இம்மாதம் 27 ஆம் திகதி பங்களாதேஷ் அணி இலங்கைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

எனினும் நாட்டுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் பங்களாதேஷ் கிரிக்கெட் குழுவினர் கொரோனா சுகாதார நெறிமுறைகளுக்கு அமைய 14 நாட்கள் தனிமைப்படுத்தலில் இருக்க வேண்டும் உள்ளிட்ட கட்டுப்பாடுகளை இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்துடன் இணைந்து கொவிட்-19 தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்துடன் அதிகாரிகள் பிறப்பித்தனர்.

இதனால் இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்தின் விதிமுறைகளையும், நிபந்தனைகளையும் பி.சி.பி. தலைவர் நஸ்முல் ஹசன் நிராகரித்துள்ளார்.

இந்நிலையில் கொவிட்-19 தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்துடன் பேச்சுவார்த்தை நடத்தவும், பி.சி.பி எழுப்பிய ஆட்சேபனைகளை மறுபரிசீலனை செய்யவும் விளையாட்டு அமைச்சர் நாமல் ராஜபக்ஷ இலங்கை கிரிக்கெட் நிர்வாகத்துக்கு அறிவுறுத்தியுள்ளார்.(4)

## ஆவரங்காலில்...

நடத்திய தாக்குதலில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள் ளார்.

குறித்த சம்பவத்தில் அதே பகுதியைச் சேர்ந்த விஜயராசா விஜிதரன் (வயது-26) என்ற இளைஞனே கால் மற்றும் கழுத்து பகுதியில் வாள்வெட்டுக் காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள் ளார்.

இரு மோட்டார் சைக்கிள்களில் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் வீட்டுக் குள் நுழைந்த வாள்வெட்டுக் கும்பல் இந்த தாக்குதலை நடத்திவிட்டு தப்பிச் சென்றி ருப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்ற னர்.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கோப்பாய்ப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,8)

## குடும்பஸ்தர்...

இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த கணேசலிங்கம் நடேசலிங்கம் (வயது-39) என்பவரே படுகொலை செய்யப்பட்டுள்ளதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

வீதியால் சென்று கொண்டிருந்த குடும் பஸ்தரை துரத்திச் சென்ற கொலையாளி கூரிய கத்தியினால் அவரின் கழுத்தினை கொடூரமான முறையில் வெட்டிக் கொலை செய்துள்ளார்.

கொலை செய்த நபரான அதே இடத் தைச் சேர்ந்த 39 வயதுடையவர் பருத்தித் துறை பொலிஸில் சரணடைந்துள்ளார்.

படுகொலை செய்யப்பட்டவரின் சடலம் மரண விசாரணைக்காகவும் பிரேத பரி சோதனைக்காகவும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசா ரணைகளை பருத்தித்துறை குற்றத்தடுப்பு .பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,18,60)

## கஞ்சா, மஞ்சள்...

போதைப்பொருள் கடத்தலுடன் தொடர் புடைய குற்றச்சாட்டில் பெண்கள் இருவர் உள்ளிட்ட 5 பேர் நேற்று செவ்வாய்க் கிழமை காலை கைது செய்யப்பட்டுள்ள னர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் இராணுவத்தினர் இணைந்து உயிலங்குளம் புதுக்குடியிருப்பு பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை அதிகாலை மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போதே குறித்த நபர்கள் கைது செய்யப்பட் டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்களிடம் இருந்து 52 கிலோ கேரள கஞ்சா மற்றும் 920 கிலோ மஞ்சள், 17 இலட்சம் ரூபாய் பணம், லொறி மற்றும் டிரக்டர் ஆகியன பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின் றது. (ம-3)

## இளைஞன்...

கப்பட்டுள்ளார்.

இதில் அதே இடத்தினைச் சேர்ந்த தங்க துரை டெனிஸ்ரன் (வயது-26) என்ற இளைஞனே சடலமாக மீட்கப்பட்டவரா வார்.

சடலம் பிரேத பரிசோதனையின் பின் னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட் டுள்ளது.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## உருவப்படங்கள்...

ஆலயத்தின் பின்புறமாக உள்ள தியாகி திலீபனின் நினைவிடத்தில் யாழ்ப்பாணம் பொலிஸார் குவிக்கப்பட்டுக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டனர்.

நீதிமன்றத் தடையுத்தரவின் எதி ரொலியாக நினைவிடத்தில் அமைக்கப் பட்டிருந்த திலீபனின் உருவப்படம் மற்றும் நினைவேந்தல் வளைவு, நினைவிடத் தைச் சூழக் கட்டப்பட்டிருந்த மஞ்சள், சிவ ப்பு நிறத்திலான கொடிகள் என்பவற்றை நேற்று முன்தினம் இரவோடிரவாக பொலிஸார் அகற்றியுள்ளனர்.

இதேவேளை தமிழ்மக்களின் உரிமை களுக்காக அகிம்சை வழியில் உண்ணா விரதமிருந்து தன்னுயிர் நீத்த தியாகி திலீபனின் 33ஆம் ஆண்டு நினைவேந் தல் நிகழ்வுகள் நேற்றுச் செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகியுள்ள நிலையில் எதிர்வரும் 26ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளமை யும் குறிப்பிடத்தக்கது. (ம-3,8,18)

## நீதியரசருக்கு...

படும்போது, வழக்கு தொடர்ந்த பா.டெனிஸ் வரன் வழக்கை வாபஸ் பெறுவார் என முன்னர் எதிர்பார்க்கப்பட்டபோதும், நேற்று வழக்கை வாபஸ் பெறவில்லை.

நேற்று தொடக்கம் 3 நாட்களிற்கு வழக்கு விசாரணை இடம் பெறும் என முன்னர் தீர்மானிக்கப்பட்டபடி நேற்று வழக்கு விசாரணை ஆரம்பித்தது.

நேற்றைய முதல்நாளில், அப்போதைய ஆளுநரின் செயலாளர் சத்தியசீலனும் வடக்கு பிரதம செயலாளர் அ.பத்திநாத னும் சாட்சியமளிக்க அழைக்கப்பட்டனர்.

நேற்று வழக்கை வாபஸ் பெற போவ தாக பா.டெனிஸ்வரன் முன்னர் அறிவித் திருந்த போதும், ஏன் வழக்கு வாபஸ் பெற வில்லையென பா.டெனிஸ்வரனிடம் வின வப்பட்டது.

அதற்கு டெனிஸ்வரன், இன்று (நேற்று) வழக்கை வாபஸ் பெறுவதென்றுதான் திட்டமிட்டிருந்தோம். வழக்கு விசார ணைக்கு முன்னதாக சி.வி.விக்னேஸ் வரன் தரப்பு சட்டத்தரணியான கனக ஈஸ்வரனுடன், எமது சட்டத்தரணி சுரேன் பெர்னாண்டோ பேசினார்.

4 நிபந்தனைகளின் அடிப்படையில் வழக்கை வாபஸ்பெற தயாராக இருப்பதாக சுரேன் பெர்னாண்டோ தெரிவித்தார். இரு தரப்பும் இணங்கினால் வழக்கை முடித் துக் கொள்ளலாமென நீதிமன்றமும் தெரி வித்தது.

1. அமைச்சரவையை பதவி நீக்கியது தவறு என மேன்முறையீட்டு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பிற்கு எதிராக, விக்னேஸ் வரன் தரப்பினால் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவை வாபஸ் பெறுவது.

2. பா.டெனிஸ்வரனை பதவி நீக்கியது தவறு என மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. அந்த தீர்ப்பை விக் னேஸ்வரன் அமுல்படுத்தவில்லை. அந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கே நடை பெற்று வருகிறது. நீதிமன்ற உத்தரவை அமுல்படுத்தாமைக்காக மேன்முறை யீட்டு நீதிமன்றத்தில் மன்னிப்பு கோரு வது.

3. முறையற்ற விதமான பதவி நீக்கிய தற்காக பா.டெனிஸ்வரனிடம் மன்னிப்பு கோருவது.

4. இதுவரை பா.டெனிஸ்வரனிற்கு ஆன வழக்குச் செலவை (சுமார் 40 இலட் சத்திற்கும் அதிகம்) செலுத்துதல்.

இந்த கோரிக் கைகளை எமது சட்டத் தரணி முன் வைத்தார். எனி னும், விக்னேஸ் வரன் தரப்பு சட்டத் தரணி கனக ஈஸ்வரன், "நாம் விசாரணைக்கு தயாராக இருக்கிறோம் என அந்த இடத்தில் தெரி வித்தார். இதை யடுத்து, வழக்கு விசாரணையை நீதிமன்றம் ஆரம் பித்தது.

இப்பொழுது எமது தரப்பின் 4 கோரிக்கைகளில் 2 கோரிக்கைகளை கைவிட தயாராக இருக்கிறேன்.

இன்று (நேற்று) எனது சட்டத்தரணி யுடன் பேசும் போது, இன்றைய அமர்வில் இரண்டு கோரிக்கைகளை கைவிடும்படி அறி வறுத்தவுள்ளேன். என்னிடம் மன் னிப்பு கோருவது, எனது வழக்கு செலவை செலுத்து வது ஆகிய இர ண்டு கோரிக் கைக ளையும் இன்று வலியுறுத்த மாட் டோம்.

இரு தரப்பும் இணக்கத்தை ஏற் படுத்துவ தென் றால், அதற்த இன்று காலை தான் இறுதி சந்தர்ப்பம். இன்று எனது சாட்சியம் அழைக் கப்படும். அப்படி எனது சாட்சியம் அழைக்கப்பட்டால், அதன் பின்னர் இணக் கப்பாட்டிற்கு சட்டத்தில் இட மில்லை. எனது கோரிக்கையை ஏற்றுக் கொள்ள விக்னேஸ்வரன் தயாராக இருப்பதாகவும், ஆனால் அவரது சட்டத்தரணிகளே தடை யாக இருப்பதாகவும் அறிகிறேன். மாகாண சபையின் முதலமைச்சரின் அதிகார மின்மையை வெளிப்படுத்த இந்த வழக்கை தொடர்ந்து நடத்தலாமென அவர்கள் திட்டமிட்டிருக்கலாம். ஆனால், இப்பொழுது விக்னேஸ்வரன் இந்த சிக்கலில் இருந்து வெளி வருவதையே விரும்புகிறேன் என்றார். (ம-3,10)

## தியாகி திலீப...

நேற்று முன்னாள் மாகாண சபை உறுப் பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் விளக் கேற்றி அஞ்சலி செலுத்தியதையடுத்து அவர் கைது செய்யப்பட்டார்.

உரும்பிராயிலுள்ள பொன்.சிவகுமா ரனின் நினைவிடத்தில், தியாகி திலீ பனின் நினைவஞ்சலியை மேற்கொண்ட பின்னர், கோண்டாவிலிலுள்ள சிறிசபாரத் தினத்தின் நினைவிடத்தில் அஞ்சலி நிகழ்வை மேற்கொண்டார்.

அங்கு சென்ற கோப்பாய் பொலிஸார் சிவாஜிலிங்கத்தை கைது செய்தனர். (ம-3,8)

### மெகா பவர்

திகதி 15/09/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0613
M 05 03 14 27 29

### நீரோகா

திகதி 15/09/2020
சீட்டிழுப்பு இலக்கம் 0703
லக்கினம் விருச்சிகம் 04 35 47 69

### மஹஜன சம்பத

திகதி 2020/09/15
சீட்டிழுப்பு இலக்கம் 4246
G 5 7 6 3 4 5

### கொவிசெத

சீட்டிழுப்பு திகதி 15-09-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2541
F 11 45 50 71

### தன நிதானய

திகதி -2020.09.15
சீட்டிழுப்பு இலக்கம் -316
W 17 19 67 69

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1216 நிறம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 15.09.2020 தினம் செவ்வாய்க்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
Q 07 19 20 66
56,268,868.40
SUPER 500 6 4 6 9

### அத கோடிபதி

செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல: 1042
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2020.09.15
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 69,997,745/-
வெற்றி இலக்கங்கள் 21 22 41 54 T
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 3068
ரூ. 100/- பரிசுக்கான விசேட இலக்கம் 285

### சனிதா

செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2020.09.15
சீட்டிழுப்பு இல.: 3372
வர்ணம் : இளநீலம்
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 40,954,547.50
வெற்றி இலக்கங்கள் 21 41 47 72 Y
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம் 4661

### கப்ருக

625
15.09 2020
C 05 20 31 55
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 83,599,790
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

### ராசி அதிர்ஷ்டம்

திகதி 15.09.2020 வெற்றி வாரம் 2923 வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 10 34 60 61 தனுசு
ரூ.500 பரிசுக்குரிய 9307
ரூ.100 பரிசுக்குரிய 413
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 12,457,820
தொ. பே.: 0112 333 546/47

# 20 ஆவது திருத்தம் அறிக்கை பிரதமரிடம்

(கொழும்பு)

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்தத்தின் வரை பினை மறு ஆய்வு செய்ய நியமிக்கப்பட்ட குழு தனது அறிக்கையை பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடம் நேற்று கைய ளித்துள்ளது.

அத்துடன் இந்த அறிக்கை இன்று அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும்.

நீதியமைச்சினால் சமர்ப்பிக்கப் பட்ட 20 ஆவது திருத்த சட்ட வரைபுக்கு எதிர்க்கட்சி மாத்திரமன்றி ஆளும் கட்சியின் உறுப்பினர்கள் பலரும் விமர்சனங்களை முன்வைத்து வந்தனர்.

இந் நிலையிலேயே 20 ஆவது திருத்த வரைபினை மறு ஆய்வு செய்வதற்கு பிர தமர் மகிந்த ராஜ பக்ஷவால் குறித்த குழுநியமிக்கப்பட்டது.

கல்வி அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தலைமையிலான இக் குழுவில் அமைச்சர் உதய கம்மன்பில, அலி சப்ரி, நிமால் சிறிபால டி சில்வா, விமல் வீரவன்ச மற்றும் இராஜாங்க அமைச்சர்களான சுசில் பிரேமஜயந்த, வியாழேந்திரன் மற்றும் பாராளுமன்ற உறுப் பினர்களான டிலான் பெரேரா மற்றும் பிரேம்நாத் சி.தொல வத்த ஆகியோர் உள்ளடக்கப்பட்டுள்ளனர். (ஜ-4)


## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியின் ஆசிரியை
திருமதி ஜெயந்தி கமலேஸ்வரன்
அவர்களின் அன்புத் தாயார்
அமரர்
மகாலட்சுமி கோபாலபிள்ளை
அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி அறிந்து துயரடைவதுடன். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
(C-330)

ஆசிரியர் கழகம்
யா/யாழ். இந்து மகளிர் கல்லூரி

## WORK & STUDY

- தொழில்புரிய முன் அனுபவம் இல்லையா?
- அல்லது போதுமான கல்வித்தகைமை இல்லையா?

இன்றே இணையுங்கள் DNMC உடன்
வடமாகாணத்தல் 50 பேருக்கு முன்னுரிமை.
பயிற்சிக் காலத்திலும் கொடுப்பனவுகள் வழங்கப்படும்.
13,500/= தொடக்கம் 24,500/= + EPF, ETF. பின்னர் பதவிக் கேற்றவாறு குறைந்தது 45,000/= இலிருந்து வழங்கப்படும். (3891)

அழைக்க :- 077 934 6224

## விற்பனைக்கு / குத்தகைக்கு

2ஆம் குறுக்குத்தெரு. பருத்தித்துறையில் (பருத்தித்துறை மத்திய சந்தைக்கு பின்புறமாக ) 2 பரப்புக் காணியுடன் கூடிய இரண்டு கடையும் பேக்கரியும் விற்பனைக்கு அல்லது குத்தகைக்கு விடப்படும்.

நிறுவனமாகவும் அல்லது பேக்கரியாகவும் பாவிக்கும் வகையில் உள்ளது. விரும்பியவர்கள் தொடர்பு கொள்ளவும். (C-326)

தொடர்புகளுக்கு 077 421 5879

## Techno World

தொழில்நுட்பக் கல்லூரி

A/L தொழில்நுட்பபிரிவு

இறுதிச் செயலமர்வு

ICT

September - 18 - 21
8.00am - 2.30pm

ஆசிரியர்கள் - லவன், உமாகாந்தன்

077 017 5346, 077 170 3549

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ் (C-323)

## Techno World

தொழில்நுட்பக் கல்லூரி

A/L தொழில்நுட்பபிரிவு

இறுதிச் செயலமர்வு

விவசாய விஞ்ஞானம்

September - 18 - 21
8.00am - 2.30pm

ஆசிரியர்கள் - நிறோஜன், ஜெயந்தன் , சாரங்கன், குமரன்

077 017 5346, 077 170 3549

வெலிங்டன் சந்தி, லிங்கம் கூல்பார் அருகாமை, யாழ் (C-323)

## A/L கணக்கீடு 2020

விசேட கருத்தரங்கு

By A. கலைச்செல்வன்

ஆரம்பம் : 17.09.2020
வியாழன் காலை 9.00 - 12.00 மணி

- முழுப்பாட அலகுகளும் கருத்தில் கொள்ளப்படும்
- முக்கிய அலகுகள் கூடுதல் கவனம் செலுத்தப்படும்.
- இறுதியில் மாதிரி வினாவிடை கலந்தாலோசிக்கப்படும்.
- இலகுவான புள்ளிபெறும் வழிகள் கலந்துரையாடப்படும். (3891)

AMC ACADAMY
Bmc Lane, Clock Tower Road, Jaffna.
Tel : 077 694 4543

## றாஜ் நகை மாடம்

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (C-1036)

## அண்ணா விரைவுப் பொதிகள் சேவை

பிரான்ஸ் டென்மார்க் பெல்ஜியம் ஜேர்மனி கொலண்ட் ஸ்பெயின் 1250/=
மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் வெளிநாட்டில் இல்லை (C-305)

லண்டன்-1050/= , பிரான்ஸ்-ஜேர்மனி-டென்மார்க்-கொலண்ட்- 1150/=
கனடா- அமெரிக்கா- 1450/= சுவிஸ்- 1400/= (வரி உள்ளடக்கப்படவில்லை)
வெளிநாட்டில் வரி அறவிடப்படும் சாத்தியம் உள்ளது

இந்தியா - டுபாய் - சைனா போன்ற நாடுகளில் இருந்து பொருட்களை விரைவாக பெற்றுக் கொள்ள தொடர்புகொள்ளவும்

070 330 5500 077 888 9388 075 330 5500

| | | | | |
|---|---|---|---|---|
| 976,KKS வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | 355, A9 வீதி கந்தசுவாமிகோவிலடி கிளிநொச்சி | சங்கானை நெல்லியடி சங்கத்தானை | புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு ஒட்டிசுட்டான் | கனகராயன்குளம் மல்லாவி /துனுக்காய் மன்னார்/வவுனியா |

## வேலைவாய்ப்பு

இலங்கையின் ஏற்றுமதி, இறக்குமதி நிறுவனம்

| பதவிகள் | சம்பள அளவுத்திட்டம் |
|---|---|
| கணக்காளர் | 1740 × 24 - 41760 /= |
| களஞ்சியக் காப்பாளர் | 700 × 24 - 16800 /= |
| விற்பனைப் பிரதிநிதி | 660 × 24 - 15840 /= + Over Target + 20% |
| மேற்பார்வையாளர் | 930 × 24 - 22320 /= |
| முகாமையாளர் | அடிப்படைச் சம்பளம் 42800/= + 20% |

தகைமைகள் – Gr. 10, O/L, A/L. முன் அனுபவம் அவசியமில்லை. EPF, ETF, Medical, Bonus பெற்றுக் கொள்ளமுடியும்.

வயதெல்லை 18 இற்கு குறையாமலும் 45 வயதிற்கு உட்பட்டவர்கள் ஆகவும் இருக்க வேண்டும். உங்களுடைய அனைத்து விபரங் களையும் பதிவு செய்யப்பட்ட சுயவிபரக் கோவையை எடுத்துக் கொண்டு September 30இற்குள் தொடர்பு கொள்ளவும். (3887)

Head Office : 021 722 3317, Jaffna I : 076 716 9269, Jaffna II : 076 711 8479

## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை



| | | | |
|---|---|---|---|
| கனடா | - 650/= | ஜேர்மனி | - 1150/= |
| லண்டன் | - 1050/= | பிரான்ஸ் | - 1150/= |

அருள்
தபால் கந்தோர் வீதி, சாவகச்சேரி.

அருள்
பெற்றோல் செற் எதிரில் பிரதான வீதி, நெல்லியடி.

அருள்
இ.போ.ச. பஸ் டிப்போ எதிரில் பிரதான வீதி, பருத்தித்துறை.



(C-301)

தொ. இல:- 076 443 1576

## வாடகைக்கு

யாழ். திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியில் பலாலி வீதியை முகப்பாகக் கொண்ட 1வது மாடி மற்றும் கீழ்த்தளம் வாடகைக்கு உள்ளது. கல்வி, பயிற்சி நிறுவனங்கள் மற்றும் சிகிச்சை நிலையங்களுக்கும் ஏற்றது. (3891)

தொடர்பு : 077 105 6694

## WIN REPAIR

உங்கள் குளிர்சாதனப்பெட்டி பழுதடைந்து விட்டது என கவலையா? கவலையை விடுங்கள். உங்கள் வீட்டுக்கே வந்து சிறந்த முறையிலும் உத்தரவாதத்துடனும் திருத்தித் தருகின்றோம். (3888)

077 964 8942 / 077 841 1314

## AIRR LINE

வெளிநாடுகளுக்கான தபால் பொதிகள் சேவை

கனடா - 650/=

கே.கே.எஸ். வீதி, உப்புமடம். (C-302)

Tel : 076 443 1575

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK-1025/=Kg

பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

DHL (C-112)

0768226240

## New Science Universe

PHYSICS

New Batches will start

2021 - HEAT
2022 - MECHANICS
on 20th September 2020

2020 A/L பரீட்சார்த்திகளிற்கான பௌதிகவியல் & இரசாயனவியலிற்கான விசேட கடந்தகால வினாத்தாள்கள் வகுப்புக்கள் நடைபெறுகின்றது. (3890)

தனியார் மற்றும் குழு வகுப்புக்களும் கற்பிக்கப்படும்.

077 748 7414

விக்னா கல்வி நிலையம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

## BARATHY

சித்தன்கேணி

மாபெரும் கருத்தரங்கு

A/L 2020 தமிழ்

யாழ். மாவட்டத்தின் முன்னணி தமிழ்ப் பேராசான்
திரு. ந. சத்தியவேந்தன்
B.A Spl. in tamil, M.phil. in tamil

40 மணித்தியாலங்கள்
முதலாவது கருத்தரங்கு ஆரம்பம்
18.09.2020 வெள்ளி 8.00 a.m

- வெளி மாணவர்களும் பங்குபற்றலாம்.
- பெயர்ப் பதிவுகளையும் கட்டணங் களினையும் முற்கூட்டியே மேற்கொள்ளவும். (C-325)

Note : ஆசிரியரின் வகுப்பு A/L 2022, 2021 பிரிவுகள் நடைபெறுகின்றன. இவற்றிற்கும் உங்கள் அனுமதிகளை பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு : 077 376 3511


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.09.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.